




PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 244 16.04.2026 வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 244 | Thursday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(16-04-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-3
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தசி இரவு 7.31 வரை பிறகு அமாவாசை.
நட்சத்திரம்:
உத்திரட்டாதி நண்பகல் 1.10 வரைபிறகு ரேவதி.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30-3.00 மணி
எமகண்டம்
காலை 6.00-7.30மணி.
சூலம் - தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9-10 மணி.
மாலை 4-5 மணி.

மேஷம் ................சாந்தம்
ரிஷபம்....................சிறப்பு
மிதுனம் ................களிப்பு
கடகம் ..................உயர்வு
சிம்மம் .............. உண்மை
கன்னி .......................வரவு
துலாம் ................. ஆர்வம்
விருச்சிகம்...........மகிழ்ச்சி
தனுசு ................. உழைப்பு
மகரம் ...................கவனம்
கும்பம்.................. யோகம்
மீனம் .....................பணிவு

# ஹார்முஸ் ஜலசந்தி பாதுகாப்பு குறித்து ட்ரம்ப் - மோடி 40 நிமிடங்கள் ஆலோசனை

**புதுடெல்லி, ஏப்.16:**

பிரதமர் நரேந்திர மோடியும் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பும் நேற்று தொலைபேசியில் 40 நிமிடங்கள் முக்கிய ஆலோசனை நடத்தினர். அப்போது அமெரிக்கா - ஈரான் போர் குறித்தும், ஹார்முஸ் ஜலசந்தியைத் திறப்பது குறித்தும் இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்தினர்.



கடந்த பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தின. இதற்கு பதிலடி தரும் வகையில் வளைகுடாவில் உள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகள் மற்றும் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர் நிறுத்தம் செய்ய பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்தது. இதனால் 2 வார காலம் இடைக்கால போர் நிறுத்தம் அமலானது. இந்த போர் நிறுத்தம் 21-ம் தேதியுடன் முடிகிறது. அதற்குள் நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட பல்வேறு தரப்பினர் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, கடந்த சனிக்கிழமை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமெரிக்கா, ஈரான் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. இது தோல்வியடைந்தது. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை முடக்குவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார். இதனால் மேற்காசியாவில் மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக்கு முக்கியத்துவம்: அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் நாடுகளுடன் இந்தியாவுக்கு மிக நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. 3 நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி நேரடி தொடர்பில் உள்ளார். இஸ்லாமாபாத் பேச்சு வார்த்தை தோல்வி அடைந்த பிறகு ரஷ்யா, துருக்கி, ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் சமரச முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சூழலில் இந்திய பிரதமருடன் அதிபர் ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

இதுகுறித்து பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: அமெரிக்க அதிபரும் எனது நண்பருமான டொனால்டு ட்ரம்ப் தொலைபேசியில் அழைத்தார். அப்போது பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆலோசித்தோம். சர்வதேச விவகாரங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து உறுதி மேற்கொண்டோம். மேற்கு ஆசியா நிலவரம் குறித்தும் (அமெரிக்கா- ஈரான் போர்) ஹார்முஸ் ஜலசந்தியில் பாதுகாப்பான, தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வது குறித்தும் ஆலோசனை நடத்தினோம். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் செர்ஜியோ கோர் டெல்லியில் நேற்று கூறும்போது, "அமெரிக்கா, ஈரான் இடையிலான மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க பல்வேறு நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. அந்த நாடுகளின் சமரச முயற்சியை அமெரிக்கா வரவேற்கிறது. இதேபோல இந்தியாவின் சமரச முயற்சியையும் நாங்கள் முழுமனதுடன் வரவேற்கிறோம்.

அதிபர் ட்ரம்பும் பிரதமர் மோடியும் செவ்வாய்க்கிழமை 40 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது ஈரான் போர் மற்றும் இந்தியா-அமெரிக்கா இடையிலான வர்த்தகம் குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது" என்றார்.

# தொகுதி மறுவரையறை ஒரு கொடூரமான நடவடிக்கை: ப.சிதம்பரம் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, ஏப்.16:**

தொகுதி மறுவரையறை என்பது கூட்டாட்சியின் சமநிலையை சீர்குலைக்கும் கொடூர நடவடிக்கை என காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.



மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் 106-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் 2023-ஐ அமல்படுத்துவதற்கான சட்டத் திருத்த மசோதா ஏப்.16 முதல் ஏப்.18 வரை நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகமாகவுள்ளது. அப்போது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 850-ஆக அதிகரிக்கப்பட்டு அதில் 280 தொகுதிகள் மகளிருக்கு ஒதுக்கப்படவுள்ளன.

வரைவு மசோதாவின்படி, மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கான தொகுதிகள் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

எனவே, 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில் 2029-ஆம் ஆண்டு மக்களவை மற்றும் மாநிலங்களின் சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை அமல்படுத்தும் நோக்கில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 81-இல் திருத்தம் மேற்கொள்ள மத்திய அரசு முடிவுசெய்துள்ளது.

மாநிலங்களுக்கு 815, யூனியன் பிரதேசங்களுக்கு 35: இந்தச் சட்டத் திருத்த மசோதாவின்படி மாநிலங்களில் உள்ள மக்களவைத் தொகுதிகளில் இருந்து அதிகபட்சமாக 815 உறுப்பினர்களும், யூனியன் பிரதேசங்களில் இருந்து நாடாளுமன்றம் முன்மொழியும் சட்டத்தின் அடிப்படையில் 35 உறுப்பினர்களும் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

இத்துடன் 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்வதற்கான தொகுதி மறுசீரமைப்பு மசோதா மற்றும் சட்டப் பேரவைகளைக் கொண்ட டில்லி, ஜம்மு-காஷ்மீர் மற்றும் புதுச்சேரி ஆகிய மூன்று யூனியன் பிரதேசங்களில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வழிவகை செய்யும் மசோதாக்களை அறிமுகப்படுத்தவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், தொகுதி மறுவரையறை என்பது கூட்டாட்சியின் சமநிலையை சீர்குலைக்கும் கொடூர நடவடிக்கை என காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எக்ஸ் பக்க பதிவில் தெரிவித்திருப்பதாவது:

அரசியல் சாசன வரைவு திருத்தச் சட்டம் பற்றி நான் கடந்த ஒரு வாரமாகச் சொல்லி வரும் அச்சம் இன்று நிரூபணமாகியிருக்கிறது.

மக்களவையின் பலம் 543 -இல் இருந்து 815 ஆக, அதாவது 50 சதவீதம் அதிகரிப்படும்போது, தமிழ்நாட்டின் தற்போதைய தொகுதிகளின் 39 -இல் இருந்து 58 ஆக உயரும் என்று சொன்னார்கள். தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டில் மாக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 58 ஆக உயரும் என்பது ஒரு மாயை.

தொகுதிகளின் எண்ணிக்கையை 58 ஆக உயர்த்துவது போல் உயர்த்திவிட்டு மறுவரையறை செய்து தொகுதிகளின் எண்ணிக்கையை 46 ஆக குறைத்துவிடுவார்கள். அதே நேரத்தில், உத்தரப் பிரதேசத்தின் தற்போதைய எண்ணிக்கை 80. இது முதலில் 120 ஆக உயரும், தொகுதி மறுவரையறைக்குப் பின் மேலும் அதிகரித்து சுமார் 140 ஆக மேலும் உயரும்

தமிழ்நாடு மட்டுமல்ல மக்கள் தொகையை நிலைப்படுத்திய 5 தென்னிந்திய மாநிலங்களில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை பிரதிநித்துவம் 24.3 சதவீதத்தில் இருந்து 20.7 சதவீதமாக குறையும். மக்களவையில் தென் மாநிலங்களின் குரல் அழுத்தப்படும், ஒடுக்கப்படும். இது ஜனநாயகத்தில் கூட்டாட்சிச் சமநிலையைத் தீவிரமாக மாற்றியமைக்கும் நோக்கம் கொண்ட, இது ஒரு வஞ்சகமான, தீய நடவடிக்கையாகும்.

இந்த அரசியல் சாசன வரைவு திருத்தச் சட்டத்தை ஒற்றுமையாக எதிர்த்து தோற்கடிக்க வேண்டும் என்று சிதம்பரம் கூறியுள்ளார்.

# 2 மாத கால மீன் பிடி தடைக்காலம் அமலுக்கு வந்தது

**ராமேசுவரம், ஏப்.16:**

தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன் கீழ், கடல் வளத்தைப் பாதுகாக்கவும் மீன் உற்பத்தியைப் பெருக்கவும் ஆண்டுதோறும் மீன்பிடி தடைக்காலம் 61 நாட்கள் கடைபிடிக்கப்படுகிறது. அதாவது ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலம் மீன்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும் காலமாகும்.



இந்த காலத்தில் விசைப்படகுகளின் எந்திர இரைச்சல் மற்றும் ராட்சத வலைகளால் மீன்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவே ஏப்ரல் 15-ந்தேதி முதல் ஜூன் மாதம் 14-ந்தேதி வரை கடலுக்கு 'ஓய்வு' அளிக்கப்படுகிறது. இதன் மூலம் சிறிய மீன் குஞ்சுகள் அழிவதைத்தடுத்து, வருங்காலங்களில் மீன் வளம் பெருக வழிவகை செய்யப்படுகிறது.

தமிழகத்தின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படும் இந்த மீன்பிடித் தடைக்காலம் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த தடை அமலுக்கு வரும்போது மீனவர்கள் கடலில் இருக்கக்கூடாது என்பது விதிமுறை ஆகும். எனவே, ஏற்கனவே கடலுக்குச் சென்றுள்ள விசைப்படகுகள் அனைத்தும் நேற்று இரவே கரை திரும்பியுள்ளன.

இதனால் ராமேசுவரம் துறைமுக பகுதியில் 800 விசைப்படகுகள் நங்கூரமிட்டு வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதே போல் பாம்பன், மண்டபம், தொண்டி, சோழியக்குடி, ஏர்வாடி, கீழக்கரை, மூக்கையூர் உள்ளிட்ட மாவட்டம் முழுவதும் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான விசைப்படகுகள் மீன்பிடிக்க செல்லாமல் ஆங்காங்கே உள்ள துறைமுக கடல் பகுதியில் நங்கூர மிட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாவட்டம் முழுவதும் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களும், அதைசார்ந்த மீன் பிடி தொழிலாளர்களும் வேலைவாய்ப்பை இழந்து உள்ளனர்.

இந்த மீன்பிடி தடையின் காரணமாக அடுத்த இரண்டு மாதங்களுக்கு ஆழ்கடல் மீன்வரத்து இருக்காது. இதனால் மீன் சந்தைகளில் விற்பனை வரலாறு காணாத உச்சத்தைத் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மீனவர்களுக்கு தடைக்காலத்தில் வழங்கப்படும் நிவாரணத்தொகை ரூ.8 ஆயிரம், தேர்தல் காலம் என்பதால் தமிழக அரசு கடந்த மாதமே அவர்களது வங்கி கணக்கில் செலுத்திவிட்டது.

# சத்தீஸ்கர்: அனல் மின்நிலைய கொதிகலன் வெடித்து 13 பேர் உயிரிழப்பு

**புதுடெல்லி, ஏப்.16:**

சத்தீஸ்கரில் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான அனல் மின்நிலையத்தில் கொதிகலன் குழாய் வெடித்து 13 ஊழியர்கள் உயிரிழந்தனர். 21 பேர் பலத்த காயமடைந்தனர்.

சத்தீஸ்கரின் சக்தி மாவட்டம் சிங்கிதராய் கிராமத்தில் வேதாந்தா நிறுவனத்தின் அனல் மின் நிலையம் செயல்பட்டு வருகிறது.

அங்கு செவ்வாய்க்கிழமை பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பிற்பகல் 2 மணியளவில் திடீரென கொதிகலனின் குழாய் பலத்த ஓசையுடன் வெடித்துச் சிதறியது. இதில் சிக்கி 13 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த காவல் துறையினர் மற்றும் தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். பலத்த காயங்களுடன் 21 தொழிலாளர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அனல் மின் நிலைய வளாகத்துக்குள் ஊழியர்கள் சிலர் சிக்கியுள்ள நிலையில் தொடர்ந்து பெரும் புகை மூட்டம் நீடிப்பதால் அவர்களை மீட்கும் பணியில் தொய்வு ஏற்பட்டது.

இந்த சம்பவத்துக்கு வேதனை தெரிவித்த மாநில முதல்வர் விஷ்ணு தேவ் சாய், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்குத் தலா ரூ.5 லட்சம், காயமடைந்தோருக்குத் தலா ரூ.50,000 இழப்பீடு அளிக்கப்படும் என்று அறிவித்தார்.

# தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சிதான் அமையுமாம்! ராமேசுவரம் கோவில் பஞ்சாங்க தகவலால் பரபரப்பு

**ராமேசுவரம், ஏப்.16:**

ராமேசுவரம் ராமநாதசாமி கோவிலில் தமிழ் புத்தாண்டு சித்திரை மாதம் முதல் நாள் அன்று பாரம்பரியமாக பஞ்சாங்கம் வாசிப்பது வழக்கம். அதன்படி ராமேசுவரம் கோவிலில் நேற்று சாமி சன்னதி முதல் பிரகாரத்தில் சோமாஸ்கந்தர் சன்னதி எதிரே பஞ்சாங்கம் வாசிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதற்காக பஞ்சாங்கம் வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. தொடர்ந்து கோவிலின் குருக்கள் உதயகுமார் வருகிற ஓராண்டில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து பஞ்சாங்கத்தில் இடம்பெற்று இருந்த தகவல்களை வாசித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

பல வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்க போட்டி போட்டு வரும். எதிர்க்கட்சிகளுக்கு ராஜயோகம் அமையும். பல கட்சிகள் கூட்டணி அமைத்து தேர்தல் களத்தை சந்திக்க நேரும். ஆளுங்கட்சி மூத்த தலைவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு அதிகரிக்கும். இதனால் பல சரிவுகளை சந்திக்க வேண்டி வரும்.

தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களின் விற்பனை நிலையில்லாத வியாபாரமாக அமையும். வெங்காயம், தக்காளி, சிறு தானியங்களின் விலை குறையும். பூண்டு, ஏலக்காய், மிளகாய், தேங்காய் போன்ற பொருட்கள் விளைச்சல் அதிகரிப்பதுடன் விலை வீழ்ச்சி அடையும். எல்லையோரத்தில் வெடி குண்டு தாக்குதல் அடிக்கடி நடக்க வாய்ப்புகள் உள்ளது.

வெளிநாட்டில் சிறுபான்மையினர் அதிகமாக பாதிக்கப்படுவர். தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி அமையும். பொதுப்பணித்துறைக்கு மத்திய அரசு பல கட்டுப்பாடுகளை விதிக்க நேரும். அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படும். சித்தா, ஆயுர்வேதம் மருத்துவத்தில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கும். பொதுமக்களிடையே பணப்புழக்கம் இருக்காது. பொருளாதாரத்தில் முன்னேற்றம் இருக்காது. மத்தியில் தமிழ்நாட்டை சேர்ந்த நபர் ஒருவர் முக்கிய பதவி வகிக்க நேரும். அமெரிக்காவிற்கு பொருளாதார நெருக்கடி ஏற்படும். இந்தியாவில் பல நிறுவனங்கள் பல சாப்ட்வேர்களை கண்டுபிடித்து உலகத்துக்கு சமர்ப்பிக்க நேரும். மேற்கண்ட பல்வேறு தகவல்கள் பஞ்சாங்கத்தில் இடம்பெற்றிருந்தன.




## வாடகை பாக்கி தராவிட்டால் வேலை நிறுத்த போராட்டம் நடத்துவோம்- எல்.பி.ஜி. கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர் சங்கம் அறிவிப்பு



**நாமக்கல், ஏப்.16:**
தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களை உள்ளடக்கியது தென் மண்டல எல்.பி.ஜி. கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம். இந்த சங்கம் நாமக்கல்லை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்த சங்கத்தில் சுமார் 4,500 கியாஸ் டேங்கர் லாரிகள் உள்ளன. இவைகள் அனைத்தும் மத்திய அரசுக்கு சொந்தமான பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களான ஐ.ஓ.சி, பி.பி.சி, எச்.பி.சி ஆகிய ஆயில் நிறுவனங்களுக்கு சொந்தமான சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து சமையல் எரிவாயுவை சிலிண்டர் நிரப்பும் மையங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்பட்டு வருகிறது.

இதில் சுமார் 1,000 எல்.பி.ஜி. கியாஸ் டேங்கர் லாரிகள் ஐ.ஓ.சி. யில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த லாரி உரிமையாளர்களுக்கு கடந்த சில வருடங்களாக வாடகை பாக்கி வைத்துள்ளது. ரூ.50 கோடி அளவுக்கு வாடகை பாக்கி வைத்துள்ளது.

ஐ.ஓ.சி. நிலுவையில் உள்ள வாடகை தொகையை லாரி உரிமையாளர்களுக்கு திரும்ப வழங்க வேண்டும் என டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் எண்ணெய் நிறுவன உயர் அதிகாரிகளிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். ஆனால் இதுவரை எண்ணெய் நிறுவன அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது.

## விஜய்யை காண குடும்பம், குடும்பமாக குவிந்த பொதுமக்கள்- தி.நகர் களை கட்டியது




**சென்னை, ஏப்.16:**
தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் நேற்று மாலை தி.நகர், ஆயிரம் விளக்கு, எழும்பூர் தொகுதிகளில் த.வெ.க. வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுகிறார்.

தி.நகர் வேட்பாளர் என். ஆனந்தை ஆதரித்து கட்சி தலைவர் விஜய் முத்து ரங்கன் சாலையில் பிரசாரம் செய்கிறார். பிரசாரத்தையொட்டி பொதுச்செயலாளர் என். ஆனந்த் அறிவுறுத்தலின் பேரில் மாவட்ட செயலாளர் க.அப்புனு தலைமையில் பொது மக்களுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டு உள்ளன.

ஆங்காங்கே குடிநீர் தொட்டிகள் வைக்கப்பட்டு அவசர மருத்துவ வசதியும் செய்யப்பட்டு உள்ளன.

## விஜய்க்கு எதிராக போராட்டம் நடிகை ஜூலி மீது வழக்கு



**சென்னை, ஏப்.16:**
ஜல்லிக்கட்டு போராட்டத்தின் மூலமாக பிரபலமான சின்னத்திரை நடிகை ஜூலி தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய்க்கு எதிராக தொடர்ந்து வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்.

அவரது இந்த வீடியோக்களுக்கு சமூக வலைத்தளங்களில் தமிழக வெற்றி கழக தொண்டர்கள், விஜய் ரசிகர்கள் ஆகியோர் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகிறார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு பெரம்பூர் தொகுதிக்கு சென்று பிரசாரத்தில் ஈடுபட்ட ஜூலி விஜய்யை விமர்சித்தும் கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் சென்னை மெரினா கடற்கரையில் ஜூலி நேற்று திடீரென அனுமதியின்றி போராட்டம் நடத்தினார். ஒரு கையில் தி.மு.க.வுக்கு ஆதரவான பேனரையும், இன்னொரு கையில் தமிழக வெற்றிக் கழகத்திற்கு எதிர்ப்பான பேனரையும் ஜூலி பிடித்திருந்தார். அவருடன் 3 பேரும் போராட்டத்தில் பங்கேற்றனர். அவ்வையார் சிலை பின்புறம் சர்வீஸ் ரோட்டில் ஜூலி சிறிது நேரம் போராட்டம் நடத்தினார்.

தி.மு.க.வுக்கு ஆதரவாக பிடித்திருந்த பதாகையில் தி.மு.க.வுக்கு வாக்களியுங்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இன்னொரு பதாகையில் அணில் படம் பொறிக்கப்பட்டு அதன் மீது எக்ஸ் சிம்பல் இடம்பெற்று இருந்தது. பெண்களுக்கு இவர்களால் பாதுகாப்பு இல்லை என்று அதில் வாசகம் இடம் பெற்று இருந்தது.

இது பற்றி தகவல் கிடைத்ததும் மெரினா போலீசார் விரைந்து சென்று ஜூலியை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினார்கள். அப்போது அவரிடம் அனுமதியின்றி இது போன்று பொது வெளியில் போராட்டம் நடத்தக்கூடாது என்று போலீசார் தெரிவித்தனர்.

தேர்தல் அதிகாரிகளிடம் உரிய அனுமதி பெற்ற பிறகு தான் பிரசாரம் செய்ய வேண்டும் என்று அவரிடம் போலீசார் அறிவுறுத்தினார்கள். பின்னர் ஜூலியிடம் எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பி வைத்தனர். இதைத்தொடர்ந்து ஜூலி உள்பட 4 பேர் மீது மெரினா போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

அனுமதியின்றி பிரசாரம் செய்தல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## தொகுதி மறுவரையறைக்கு எதிராகக் கருப்புக்கொடிப் போராட்டம்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்பு



**சென்னை, ஏப்.16:**
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது;-

தமிழ்நாட்டையும், தென்னிந்திய மாநிலங்களையும் பாதிக்கும் வகையில், அம்மாநிலங்கள் அரசியல் வலிமையை இழக்கும் வகையில், மத்திய பாஜக அரசு ,அவசர கோலத்தில், தொகுதி மறுவரையறையை கொண்டுவருவதற்காக நாடாளுமன்றத்தில் நாளை (16.04.2026) அவசர சட்டத் திருத்தத்தை செய்ய உள்ளது. அதற்கு எதிராக திமுக தலைவரும் தமிழ்நாடு முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின், கருப்புக்கொடிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இப்போராட்டத்தை ஆதரித்து வரவேற்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தக் கருப்புக் கொடி போராட்டத்தில் பங்கேற்கும்.அனைத்து அரசியல் கட்சிகளுடன் ஜனநாயக ரீதியிலான ,முறையான விவாதங்களை நடத்தி, எந்த மாநிலமும் பாதிக்காத வகையில், கருத்தொற்றுமையை ஏற்படுத்தி, நாடாளுமன்ற தொகுதி மறுவரைக்கான சட்டத்திருத்தத்தை கொண்டு வருவதற்குப் பதிலாக, மத்திய பாஜக அரசு தென்னிந்திய மாநிலங்களை வஞ்சிக்கும் ஜனநாயக விரோதப் போக்கை கடைபிடிக்கிறது.

மத்திய பா.ஜ.க. அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களுக்கு எதிராக செயல்படுகிறது.


நாளை கொண்டு வரப் போகும் சட்டத் திருத்தத்தால், வட மாநிலங்களுக்கும் - தென் மாநிலங்களுக்குமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையில் அதிக அளவில் ஏற்றத்தாழ்வு ஏற்படும்.

பெயரளவுக்கு தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கும் தொகுதிகளை அதிகரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு, வட மாநிலங்களுக்கு, மிக மிக கூடுதலாக தொகுதிகளை அதிகரிப்பது அநீதியானதாகும்.

## கோழிக்கோட்டில் சோகம்: காட்டு யானை பலி

**கோழிக்கோடு, ஏப்.16:**
கோழிக்கோடு மாவட்டம், பெருவண்ணமுழி உள்ள பகுதியில் ஒரு காட்டு யானை கூட்டம் கீழே இறங்கி வந்தது. தகவல் கிடைத்த உடன் வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர், மேலும் யானை கூட்டத்தை விரட்ட பட்டாசுகளை வெடித்தனர்.

இதற்கிடையில், வனத்துறையினர் பட்டாசுகளை வெடித்து யானைகளை விரட்டியபோது,



ஒரு யானை ஆக்ரோஷமடைந்து அதிகாரிகளை துரத்தியது. அந்த யானையிடம் இருந்து தப்பிக்க அதிகாரிகள் ஒரு வீட்டிற்குள் தஞ்சம் புகுந்தனர்.

கோபத்தில் இருந்த அந்த யானை அங்கிருந்த வீட்டின் கார் ஷெட்டை சேதப்படுத்த முயன்றபோது, ஷெட்டின் இரும்பு தூண் அதன் நெஞ்சு பகுதியில் ஆழமாக பாய்ந்தது. வலியால் துடித்த யானை சிறிது தூரம் சென்று நிலைகுலைந்து விழுந்து உயிரிழந்தது.

இச்சம்பவம் குறித்து வனத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை எற்படுத்தியுள்ளது.

## முதலிரவு அறையில் புதுமாப்பிள்ளையை அலறவிட்ட புதுப்பெண்... பரபரப்பு சம்பவம்

**ஆக்ரா,ஏப்.16:**
உத்தரபிரதேச மாநிலம் ஆக்ரா அருகே உள்ளது ஜகதீஷ்புரா. இந்த ஊரை சேர்ந்த மணமகனுக்கும், அருகே உள்ள ஹத்ராசை சேர்ந்த புதுப்பெண்ணுக்கும் திருமணம் நடைபெற்றது. வழக்கமான திருமண சடங்குகள் முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டுக்கு புதுப்பெண்ணை அழைத்து வந்திருந்தனர்.

முதலிரவுக்கான ஏற்பாடுகள் நடந்து வந்த நிலையில் புதுப்பெண்ணின் அதிரடி நடவடிக்கையால் திருமண வீடு களேபரமானது. மணமகன் அறையில் நுழைந்த புதுப்பெண், தன்னிடம் வெட்கத்துடன் கனிவாக பேசுவாள் என்று எதிர்பார்த்து காத்திருந்தார் மாப்பிள்ளை.

ஆனால் புதுப்பெண், ரூ.90 லட்சம் ரொக்கமாகதந்தால்தான் முதலிரவு நடக்கும் என்று கூறி மாப்பிள்ளையை அதிர்ச்சி அடைய வைத்து உள்ளார். மணமகன் இதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததால் இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே இருவரும் முதலிரவு அறையை திறந்து கொண்டு இருவரும் வெளியே வந்ததால் மணமகன் வீட்டார் பெண்ணுக்கு அறிவுரை கூறினர்.

ஆனாலும் அவர் சமாதானம் ஆகவில்லை. தங்கள் குடும்பத்தினருக்கு தகவல் கொடுத்ததால் சற்று நேரத்தில் அவர்களும் அங்கு வந்துவிட்டனர். அவர்களும் பெண்ணுக்கு அறிவுரை கூறாமல் ஆதரவாக பேசியதால், கல்யாண வீடு கலவர வீடானது. தகராறில் பொருட்கள் தூக்கிவீசப்பட்டன. மேலும் மாப்பிள்ளை வீட்டாரை வீட்டுக்குள் வைத்து வெளியில் பூட்டிய மணமகள் வீட்டார், சமையல் கியாஸ் குழாயை திறந்துவிட்டு, வீட்டுக்கு தீவைக்க முயன்றுள்ளனர்.இதனால் மாப்பிள்ளை வீட்டார் கூச்சல் போட்டதால் அக்கம்பக்கத்தினர் வந்து சமாதானம் பேசினர். அவர்களின் சமாதானத்துக்கும் பெண் வீட்டார் கட்டுப்படாததால், விஷயம் போலீஸ் நிலையம் சென்றது. தங்களை உயிருடன் கொளுத்த முடிவு செய்ததாக மணமகன் வீட்டார் புகார் செய்தனர். தனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லை என்றும், பணம் நகை தருவதாக சொன்னதால்தான் திருமணத்துக்கு சம்மதித்ததாகவும் அந்த பெண் கூறி உள்ளார். முதலிரவு அறையில் தனது கோரிக்கைக்கு கணவர் இசைந்து கொடுக்காததால் அங்கிருந்த நகைகளையும், விலையுயர்ந்த பொருட்களையும் எடுத்துக்கொண்டு தங்கள் குடும்பத்தினரை கூப்பிட்டு தகராறில் ஈடுபட்டுள்ளார். பின்னர் விலையுயர்ந்த நகை-பொருட்களுடன் அங்கிருந்து தப்பி உள்ளார். அதில் மாமியாரின் நகைகளும் இருந்ததாக புகாரில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்த புகாரில் போலீசார் நடவடிக்கை எடுக்க தயங்கியதாக மாப்பிள்ளை வீட்டார் கோர்ட்டை நாடினர். அதன்பிறகு தான் போலீசார் இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதாக தெரிகிறது. திருமண ஏற்பாடு செய்த புரோக்கரை போலீசார் தேடி வருகிறார்கள்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஏப்ரல் 23ம் தேதி கோயம்பேடு காய்கறி சந்தைக்கு முழு விடுமுறை!!

**சென்னை, ஏப்.16:**
சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் ஏப்ரல் 23ம் தேதி கோயம்பேடு காய்கறி சந்தைக்கு முழு விடுமுறை அறிவிக்கப்படுவதாக கோயம்பேடு அனைத்து வியாபாரிகள் சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு சங்கம் தெரிவித்துள்ளது.



## புதுவை அமைச்சரவையில் புதிதாக துணை முதல்-அமைச்சர் பதவி?

**புதுவை, ஏப்.16:**
புதுவை அமைச்சரவையில் முதல்-அமைச்சருடன் சேர்த்து 6 அமைச்சர்கள் மட்டுமே இடம்பெறுவர்.

2021 சட்டமன்ற தேர்தலில் என்ஆர்.காங்கிரஸ், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியை பிடித்தது. அப்போது துணை முதல்-அமைச்சர் பதவியை உருவாக்க முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டது.

முதல்-அமைச்சர் ரங்கசாமிக்கு அடுத்தபடியாக நமச்சிவாயத்துக்கு துணை முதல்-அமைச்சர் பதவி வழங்க பா.ஜ.க. முயற்சிகளை எடுத்தது. ஆனால், முதல்-அமைச்சர் ரங்கசாமி, இதற்கு உடன்படவில்லை.

இதனால் நமச்சிவாயம் 2வது அமைச்சராக அமைச்சரவையில் இடம்பெற்றார். இந்த நிலையில் கடந்த 9ம்தேதி புதுவை சட்டசபை தேர்தல் ஓட்டுப்பதிவு நடந்து





முடிந்துள்ளது. தற்போது மீண்டும் துணை முதல்-அமைச்சர் பதவியை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்காக உள்துறை அமைச்சகத்துக்கு அனுமதி கேட்டு கவர்னர் மாளிகையிலிருந்து கோப்பு அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது புதுவை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே கடந்த முறை என்ஆர்.காங்கிரஸ், பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்ற பிறகு துணை முதல்-அமைச்சர் பதவியை உருவாக்க முயற்சிகள் நடந்தது. இந்த முறை தேர்தல் முடிந்தவுடனேயே துணை முதல்-அமைச்சர் பதவிக்கான வேலைகள் தொடங்கியுள்ளது.

இருப்பினும் அமைச்சர்களை நியமிப்பது முதல்-அமைச்சரின் விருப்பம். இதனால் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் முதல்-அமைச்சர் கையில்தான் துணை முதல்-அமைச்சர் நியமனம் இருக்கும்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை பொறுத்தவரை துணை முதல்-அமைச்சர் என்ற பதவியே கிடையாது. ஆனால் மாநிலங்கள் தங்கள் வசதிக்காக அமைச்சரவையில் துணை முதல்-அமைச்சர் என்ற பொறுப்பை வழங்குகின்றன. அவர்களும் சட்டப்படி அமைச்சர்களாகத்தான் கருதப்படுவர்.

## பாளையங்கோட்டை தொகுதியில் இருந்து செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு செல்லப்போவது யார்?



**திருநெல்வேலி, ஏப்.16:**
பாளையங்கோட்டை சட்டப்பேரவை தொகுதியில் 17 வேட்பாளர்கள் களம் காணும் நிலையில், இவர்களிடையே செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு செல்ல கடும் போட்டி நிலவுகிறது. ஏராளமான கல்வி நிறுவனங்களை கொண்டிருப்பதால் தென்னகத்தின் ஆக்ஸ்போர்ட் என பெயர்பெற்ற பாளையங்கோட்டை தொகுதி முழுக்க நகர்ப்புற பகுதிகளை உள்ளடக்கியது.

தொகுதி மறுசீரமைப்புக்குப்பின் திருநெல்வேலி மாநகராட்சியிலுள்ள பெரும்பாலான வார்டுகள் இத் தொகுதிக்குள் வருகிறது. மாவட்டத்திலுள்ள மற்ற சட்டப்பேரவைதொகுதிகளுடன் ஒப்பிடும் போது பரப்பளவில் குறுகியது. இதனால் இத் தொகுதியில் வாக்காளர்களை குறிப்பிட்ட நாளுக்குள் வேட்பாளர்கள் சந்தித்து ஆதரவு திரட்டி விடுகிறார்கள்.

**திமுக 8 முறை வெற்றி**


பாளையங்கோட்டை தொகுதியில் 1977-ம் ஆண்டுக்கு பின்பு நடைபெற்றுள்ள 11 தேர்தல்களில் திமுக 8 முறையும், அதிமுக 3 முறையும் வென்றுள்ளன. கடந்த 1996-ம் ஆண்டு முதல் 6 தேர்தல்களாக தொடர்ந்து திமுக வெற்றிபெற்றுள்ளது.

தொகுதி மறுசீரமைப்புக்கு முன்பு, இத்தொகுதிக்குள் புறநகர்ப் பகுதிகளான சீவலப்பேரி, மேலச்செவல் சுற்று வட்டாரப் பகுதிகள் சேர்ந்திருந்தபோது அதிமுக வென்றுள்ளது. இத்தொகுதியில் முன்னாள் அமைச்சர் டி.பி. எம்.மைதீன்கான் தொடர்ந்து 4 முறை வென்றுள்ளார்.

தற்போதைய தேர்தலில் பாளையங்கோட்டை தொகுதியில் 17 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அவர்களில் திமுக, அதிமுக, நாம் தமிழர், தவெக ஆகிய 4 கட்சிகளிடையே கடும் போட்டி நிலவுகிறது. திமுக சார்பில் தற்போதைய எம்எல்ஏ அப்துல் வகாப் 2-வது முறையாக போட்டியிடுகிறார்.

## சாத்தூர் அருகே ஆம்னி பஸ்- பைக் மோதல்; பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பலி: நள்ளிரவில் டீ குடிக்க சென்றபோது சோகம்

**சாத்தூர், ஏப்.16:**
சாத்தூர் அருகே, நேற்று நள்ளிரவு ஆம்னி பஸ்-பைக் மோதிய விபத்தில் பிளஸ் 2 மாணவர்கள் 3



பேர் பரிதாபமாக பலியாகினர். இந்த சம்பவம் உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகே உள்ள பேர்நாயக்கன்பட்டியை சேர்ந்தவர் செல்வம் மகன் கோகுல் (17). இவர், சிவகாசியில் உள்ள தனியார் மெட்ரிக் பள்ளியில் பிளஸ் 2 படித்து பொதுத்தேர்வு எழுதி முடிவுக்காக காத்திருந்தார். இந்நிலையில், கோகுலின் செல்போன் பழுதானதால், அதனை சரிபார்ப்பதற்காக உறவினரின் பைக்கில் நேற்று பிற்பகல் சிவகாசிக்கு சென்றார். அங்கு செல்போன் கடையில் பழுது நீக்க தனது போனை கொடுத்தார்.

கடைக்காரர், செல்போன் பழுதை சரிசெய்ய அதிக நேரமாகும் என கூறியதால், கோகுல் அங்கிருந்து புறப்பட்டு சிவகாசியில் தன்னுடன் படித்த வகுப்பு தோழர்கள் சீனிவாசன் மகன் பிரசன்னா (17) மற்றும் யுவராஜ் (17) ஆகியோரை சந்தித்தார். பின்னர், கோகுல் தனது நண்பர்களுடன் இரவு 9 மணியளவில் செல்போன் கடைக்குச் சென்று, பழுது நீக்கிய செல்போனை பெற்று கொண்டார்.

இதையடுத்து நண்பர்கள் மூவரும் நீண்ட நேரம் பேசி கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. பின்னர் நள்ளிரவு 11.45 மணியளவில் டீ குடிப்பதற்காக ஒரே பைக்கில் 3 பேரும், சாத்தூர்-கோவில்பட்டி நான்கு வழிசாலையில் சென்று கொண்டிருந்தனர். போக்குவரத்து நகர் அடுத்த காட்டுபள்ளிவாசல் பகுதியில் எதிரே வந்த தனியார் ஆம்னி பஸ், பைக் மீது மோதியது.

## தி.நகரில் புஸ்ஸி ஆனந்தை ஆதரித்து விஜய் வாக்கு சேகரிப்பு



**சென்னை, ஏப்.16:**
தி.நகர் தொகுதியில் களமிறங்கும் தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்தை ஆதரித்து விஜய் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதற்காக, சென்னை தி.நகரில் தவெக தலைவர் விஜய் ரோடு ஷோ நடத்தி வருகிறார்.

தி.நகரில் தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜயை பார்த்து கூடியுள்ள நூற்றுக்கணக்கான தொண்டர்கள் உற்சாகமாக முழக்கம் எழுப்பி வருகின்றனர்.

## ஆந்திர மாநிலம் சத்ய சாய் மாவட்டத்தில் கேஸ் சிலிண்டர் வெடித்து 4 பேர் உயிரிழப்பு!!

**அமராவதி, ஏப்.16:**
ஆந்திர மாநிலம் சத்ய சாய் மாவட்டத்தில் கேஸ் சிலிண்டர் வெடித்து 4 பேர் உயிரிழந்தனர். விபத்தில் படுகாயமடைந்த 10 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சை பெறுபவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.


திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318


WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF
(Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD
(Male & Female)
ELECTRICIAN & HELPERS
(Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families


GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய்
₹ 1.80
லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10
கிராம் GOLD COIN
சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118


ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


குன்னத்தோழும்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிவாக வரவும்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
தீபாவளி
RAVIKUMAR AND COMPANY


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit /No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மிக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!



ஏன் இந்த இடைவெளி? நம்
இதயம் தான் எப்போதும்
இணைந்திருக்கிறதே!

கண்ணீரில் நனைந்த
கவிதைகள் எல்லாம்,
உன் நினைவாகவே
இருக்கின்றன.

நீ வரும் பாதையில்
பூக்களாகக் கிடக்கிறேன்,
உன் பாதம் பட்டால்
போதும்.

காத்திருப்பின் சுகம்,
உன்னைப் போன்ற
ஒரு தேவதைக்காக
காத்திருக்கும் போது
தெரியும்.

நீ மீண்டும் வருவாய் என்ற
நம்பிக்கையிலேயே என்
உயிர் ஊசலாடுகிறது.

## வாழ்க்கை தத்துவம்...



சோகங்களை பணம் போல்
சேர்த்து வைப்பதை விட
கொஞ்சம் கொஞ்சமாக
செலவழித்து பாருங்கள்
நிம்மதி கிடைக்கும்

ஒன்றை விட்டு
விலகுவதற்கு
முன் அதை ஏன்
தொடங்கினோம்
என்று யோசி

ஏமாற்றம் வலியை
தந்தாலும் நல்வழியையும்
காட்டும் வாழ்க்கைக்கு

## "காதல் தியாகம்"



மழை நனைத்த மாலை. பேருந்து நிலையம் வெறிச்சோடிக் கிடந்தது. அங்கிருந்த பெஞ்சில் ரேவதி காத்திருந்தாள். கையில் ஒரு கடிதம். கண்களில் முடிவில்லா கேள்விகள்.

அவன் வருவானா...?

பத்து நிமிடம்... இருபது நிமிடம்... அவள் இதயம் துடித்தது.

"ரேவதி..." திரும்பிப் பார்த்தவள் முகத்தில் சிரிப்பும், கண்களில் கண்ணீரும் கலந்து நின்றன.

"அருண் நீ நிச்சயம் வருவே!ன்னு எனக்குத் தெரியும்..." என்றாள்.

அருண் சிரிக்கவில்லை. அவன் கண்களில் ஒரு அமைதியான புயல்.

"வந்து... நான்.. உன்னை அழைச்சிட்டுப் போக வரலை..ரேவதி."

அவள் முகம் வாடியது.

"என் அப்பாவுக்கு உடல் நிலை சரியில்லை... வீட்டில் நான்தான் பொறுப்பு.... அதே போல்.. நீயும் உன் குடும்பத்தோட ஒரே நம்பிக்கை. நாம ரெண்டு பேரும் ஓடிப்போனா... நம்ம காதல் ஜெயிக்கலாம்... ஆனா... நம்ம ரெண்டு குடும்பமும் தோற்கும்."

"அப்படின்னா...?" ரேவதியின் குரல் நடுங்கியது.

"நம்ம காதலை விட்டுடலாம்..." அவன் மெதுவாக சொன்னான்.

ஒரு நொடி... உலகமே நின்றது போலானது ரேவதிக்கு.

"உன் அப்பாவும் அம்மாவும் என்னால் சந்தோஷத்தை இழக்கக் கூடாது.... அதுதான் எனக்கு முக்கியம்." அருண் சொல்ல ரேவதி அவன் கையைப் பிடித்தாள். "அப்படின்னா நம்ம?"

அருண் மெதுவாக அவள் கையை விடுவித்தான். "நம்ம காதல் தோற்கலை... அது தியாகம் ஆயிடுச்சு."

மழை இன்னும் கொட்டியது. அவன் திரும்பி நடந்தான்.

ரேவதி அழவில்லை. சிரித்தாள்... சின்ன வலியோடு.

(முற்றும்)



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

கணவன் - மனைவி அட்டகாசம்

மனைவி: "ஏங்க, கல்யாணத்துக்கு முன்னாடி எனக்கு கவிதை எல்லாம் எழுதுனீங்களே, இப்ப ஏன் எழுதுறது இல்ல?"

கணவன்: "வேட்டையாடுறதுக்கு முன்னாடி தான் புலிக்குத் தீனி போடுவாங்க, வேட்டையாடின அப்புறமா போடுவாங்க?"

## தினம் ஒரு சமையல்



### முட்டை குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 4 | -முட்டை |
| 100 கிராம் | -சின்ன வெங்காயம் |
| 2 | -தக்காளி |
| 2 | -முருங்கைக்காய் |
| ஒரு டீஸ்பூன் | -வத்தல் பொடி |
| ஒரு டீஸ்பூன் | -கொத்தமல்லி பொடி |
| அரை டீஸ்பூன் | -மஞ்சள்தூள் |
| நெல்லிக்காய் அளவு | -புளி |
| தாளிக்க தேவையான அளவு | -எண்ணெய் |
| அரை மூடி | -தேங்காய் |
| தேவையான அளவு | -உப்பு |

செய்முறை:



ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு உளுத்தம்பருப்பு சேர்த்து பொரித்ததும் சின்ன வெங்காயம், தக்காளி சேர்த்து நன்கு வதக்கவும், தேங்காயை துருவி வெங்காயம் சீரகம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்,

அரைத்த தேங்காயை வெங்காயம் தக்காளி வதங்கிய பிறகு சேர்க்கவும் அத்துடன் மல்லித்தூள் ஒரு தேக்கரண்டி மிளகாய்த்தூள் ஒரு தேக்கரண்டி மஞ்சள் தூள் அரை தேக்கரண்டி சேர்க்கவும்,

புளியை நன்கு கரைத்து கலவையுடன் சேர்க்கவும் முருங்கைக்காய் நறுக்கியது அதில் சேர்த்து நன்கு கொதிக்கவிடவும் கொதித்த பிறகு அடுப்பில் தீயை குறைத்து விட்டு முட்டையை அதில் உடைத்து ஊற்றவும் பிறகு குறைந்த தீயில் முட்டை வேக வேண்டும் இப்போது சுவையான உடைத்து ஊற்றிய முட்டை குழம்பு ரெடி.

## அரைக்கீரை பயன்கள்



அரைக்கீரை, இரும்புச்சத்து, கால்சியம் மற்றும் வைட்டமின்கள் (A, C, K) நிறைந்த ஒரு சத்தான கீரை வகையாகும். இது செரிமானத்தை மேம்படுத்துதல், இரத்த சோகையைத் தடுத்தல், எலும்பு மற்றும் பற்களை வலுப்படுத்துதல், கண் பார்வையை மேம்படுத்துதல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல் போன்ற முக்கிய நன்மைகளை வழங்குகிறது.

அரைக்கீரையின் முக்கிய ஆரோக்கிய நன்மைகள்:

இரத்த விருத்தி மற்றும் சோகை தடுப்பு: அதிக இரும்புச்சத்து இருப்பதால், ஹீமோகுளோபின் அளவை அதிகரித்து இரத்த சோகையை (ANEMIA) குணப்படுத்த உதவுகிறது.

எலும்பு பலம்: கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்கள் எலும்புகள் மற்றும் பற்களை வலுவாக்குகின்றன.

செரிமானம் மற்றும் மலச்சிக்கல்: நார்ச்சத்து (FIBER) செரிமானத்தை தூண்டி மலச்சிக்கல் பிரச்சனையை சரிசெய்கிறது.

கண் பார்வை மேம்பாடு: வைட்டமின் A சத்து நிறைந்திருப்பதால், கண் பார்வையை கூர்மையாக்குகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி: வைட்டமின் C மற்றும் பிற தாதுக்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றன.

முடி ஆரோக்கியம்: முடி வளர்ச்சியை ஊக்குவித்து, மயிர்க்கால்களுக்கு பலம் சேர்க்கிறது.

சளி, இருமல் நிவாரணம்: சித்த மருத்துவத்தில் காய்ச்சல், சளி, இருமல் மற்றும் உடல் சூட்டை தணிக்கப் பயன்படுகிறது.


பயன்படுத்தும் முறை:

அரைக்கீரையை மசியல், சூப், கூட்டு, அல்லது பொரியல் செய்து சாதத்துடன் சேர்த்து சாப்பிடுவது மிகவும் சிறந்தது. குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்கு இது சிறந்த ஊட்டச்சத்து உணவாகும்.

குறிப்பு: இந்தத் தகவல்கள் பொதுவான ஆரோக்கிய நன்மைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஏதேனும் கடுமையான நோய்களுக்கு மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

## சினிமா

## கருப்பு படத்தின் தமிழக திரையரங்க உரிமை.. இத்தனை கோடிக்கு விற்பனையா!!



ஆர்.ஜே. பாலாஜி – சூர்யா கூட்டணியில் பிரம்மாண்டமாக உருவாகியிருக்கும் திரைப்படம் கருப்பு. இப்படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க, திரிஷா, சுவாசிகா, இந்திரன்ஸ், அனாகா மாயா, நட்டி நட்ராஜ் என பலரும் இப்படத்தில் நடித்துள்ளனர். சாய் அப்யங்கர் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இப்படத்தை கடந்த ஆண்டே திரையரங்கில் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால், சில காரணங்களால் இப்படம் 2026க்கு தள்ளிப்போனது. வருகிற மே 14ஆம் தேதி திரையரங்குகளில் வெளிவரவிருக்கும் இப்படத்தை கொண்டாட ரசிகர்கள் தயாராகி வருகிறார்கள்.

பெரிய நடிகர்கள் படங்களின் ரிலீஸுக்கு முன், அப்படத்தின் ப்ரீ பிஸினஸ் குறித்த விவரங்கள் வெளிவரும். அந்த வகையில், சூர்யாவின் கருப்பு திரைப்படத்தின் தமிழக திரையரங்க உரிமை குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், கருப்பு திரைப்படத்தின் தமிழக திரையரங்க உரிமை ரூ. 37 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாம். இதற்கு முன் நடந்த ப்ரீ பிஸினஸில் THEATRICAL உரிமைகள் இல்லாமல் இப்படம் ரூ. 110 கோடி பிஸினஸ் செய்திருந்ததாக தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.



கெமி தற்போது தாய்லாந்துக்கு ட்ரிப் சென்று இருக்கும் நிலையில் அங்கு நீச்சல் உடையில் இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

ஹாட் புகைப்படங்கள் இதோ பாருங்க.

## யூத் திரைப்படத்தின் இறுதி வசூல்.. எவ்வளவு தெரியுமா..



2026ஆம் ஆண்டு தமிழ் சினிமாவில் வெளிவந்த தலைவர் தம்பி தலைமையில், வித் லவ், தாய் கிழவி, யூத் ஆகிய திரைப்படங்கள் மாபெரும் வெற்றியடைந்தன.

இதில் கென் கருணாஸ் இயக்கி, ஹீரோவாக நடித்து வெளிவந்த திரைப்படம்தான் யூத். இப்படத்தில் கென்னுடன் இணைந்து சுராஜ், தேவதர்ஷினி, நளினி, மீனாட்சி, அனிஷ்மா அனில்குமார் என பலரும் நடித்திருந்தனர். ஜி.வி. பிரகாஷ் குமார் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார்.

இளைஞர்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்ற இப்படம் வசூலில் வேட்டையாடி வருகிறது. முதல் நாளில் இருந்தே யூத் திரைப்படத்தின் வசூல் விவரங்களை தொடர்ந்து பார்த்து வருகிறோம்.

இந்த நிலையில், 25 நாட்களை கடந்திருக்கும் இப்படத்தின் வசூல் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, யூத் திரைப்படம் மொத்தமாக உலகளவில் ரூ. 80 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது. இதுவே இப்படத்தின் இறுதி வசூல் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் தலைவர்களின் நம்பிக்கைக்குரிய வெற்றித் தலம்!

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில், முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாகும். இது சூரபத்மனை வதம் செய்து வெற்றி பெற்ற தலம் என்பதால், இங்கு வீற்றிருக்கும் 'ஜெயந்தி நாதர்' வெற்றியைத் தருபவர் என்று போற்றப்படகிறார். அரசியல் தலைவர்கள் மற்றும் பக்தர்கள் தங்களின் தீவினைகள் நீங்கவும், தேர்தலில் வெற்றி பெறவும், குறைகள் தீரவும் திருச்செந்தூர் வந்து முருகனை வழிபடுவதை பெரும் நம்பிக்கையாகக் கொண்டுள்ளனர். சூரனை வென்றதால் இந்தத் தலம் 'திருஜெயந்திபுரம்' என அழைக்கப்பட்டு, பின்னர் 'திருச்செந்தூர்' என மருவியது. தேர்தலில் போட்டியிடுபவர்கள் தங்கள் வெற்றியை உறுதி செய்ய இங்கு வந்து நேர்த்திக்கடன் செலுத்துவது வழக்கமாக உள்ளது.

ஆலய அமைப்பு மற்றும் வரலாற்றுச் சிறப்பு திருச்செந்தூர் கோவிலில் (THIRUCHENDUR MURUGAN TEMPLE) பாலசுப்ரமணிய சுவாமி கிழக்கு நோக்கியும், சண்முகர் தெற்கு நோக்கியும் அருள்பாலிக்கின்றனர். வீரபாகு தேவர் இங்கு காவல் தெய்வமாக உள்ளார். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில், டச்சு நாட்டு கடல் கொள்ளையர்கள் திருச்செந்தூர் கோவிலில் கொள்ளையடித்தனர். அங்கிருந்த கற்சிலைகளை உடைத்ததோடு, தெற்கு நோக்கி வீற்றிருந்த ஐம்பொன் திருவுருவமாகிய ஆறுமுக நயினாரை கப்பலில் தூக்கிச் சென்றனர். கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்தில், பெரும் புயலும் இடியுடன் கூடிய மழையும் பெய்தது. கடல் கொந்தளிப்பால் கப்பல் தத்தளித்ததைக் கண்டு பயந்த கொள்ளையர்கள், சண்முகப் பெருமானின் சிலையைக் கடலில் தூக்கிப் போட்டனர். அடுத்த கணமே புயல் ஓய்ந்தது. இதனைத் தொடர்ந்து, முருக பக்தரான வடமலையப்ப பிள்ளையின் கனவில் தோன்றிய முருகப்பெருமான்,





தான் கடலில் இருக்கும் இடத்தைக் கூறி தன்னை மீட்குமாறு பணித்தார். அதன்படி, வடமலையப்ப பிள்ளை கடலில் இருந்து சண்முகர் விக்ரகத்தைக் கண்டெடுத்து, மீண்டும் கோவிலில் பிரதிஷ்டை செய்தார்.

லூசிங்டன் துரையும் முருகனின் வியர்வையும் சுமார் 190 ஆண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலி சீமையில் ஆங்கிலேய ஆட்சியராக எஸ்.ஆர். லூசிங்டன் இருந்தார். 1803-ஆம் ஆண்டு திருவிழாவின் போது அவர் திருச்செந்தூர் வந்திருந்தார். முருகனுக்கு தீப தூப உபசாரங்கள் செய்து, கவரிமான் விசிறி கொண்டு வீசுவதைக் கண்ட அவர், "வீதி உலா வந்து களைத்துப் போன முருகனுக்கு என்ன வியர்க்கவா செய்கிறது?" என ஏளனமாக வினவினார். பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அர்ச்சகர் உற்சவ மூர்த்தியின் ஆபரணங்களைக் களைந்துவிட்டுப் புதிய பருத்தி ஆடையைச் சாத்தினார். ஆச்சரியப்படும் விதமாக, அந்த ஆடை முழுவதும் வியர்வையால் நனைந்தது! இதைக் கண்டு மெய்சிலிர்த்த லூசிங்டன், தனது பிழையை உணர்ந்து முருகனை வழிபட்டார். அதன் பின் விலைமதிப்பற்ற வெள்ளிப் பாத்திரங்களையும் ஆபரணங்களையும் காணிக்கையாகச் செலுத்தினார்.

மகிமை நிறைந்த இலை விபூதி பிரசாதம் திருச்செந்தூர் கோவிலில் பன்னீர் இலைகளில் வைத்து வழங்கப்படும் 'இலை விபூதி' மிகவும் சிறப்பு வாய்ந்தது. கோவில் திருப்பணியின் போது பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப் பணமில்லாத சூழலில், முருகப்பெருமான் சாதுக்களின் கனவில் தோன்றி, பன்னீர் இலையில் விபூதியை வைத்து வழங்குமாறு கூறினார். பணியாளர்கள் அந்த விபூதிப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தபோது, அதில் அவரவர் உழைப்பிற்கேற்ற ஊதியம் (பொற்காசுகள்) இருந்ததாக வரலாறு கூறுகிறது. இந்த இலை விபூதியை உட்கொண்டால் காசநோய், கை கால் வலிப்பு, கபம் மற்றும் குஷ்டம் போன்ற நோய்கள் குணமாவதாக நம்பப்படுகிறது.

தனித்துவமான வழிபாட்டு முறைகள்

கண் மலர்கள்: ஆறுமுகப் பெருமானின் வலக்கண் சூரியன்; இடக்கண் சந்திரன். அதனால் அவர் வலப்புறம் உள்ள வள்ளியம்மை கையில் சூரியனைக் கண்டு மலரும் 'தாமரை' மலரும், இடப்புறம் உள்ள தெய்வானை கையில் சந்திரனைக் கண்டு மகிழும் 'குமுதம்' மலரும் காணப்படுகின்றன. பகிர்வு ஸ்ரீராமஜயம்

ஆடை அலங்காரம்: மூலவர் சுப்பிரமணியருக்குத் தூய வெள்ளை நிற ஆடையும், சண்முகருக்குப் பச்சை நிற ஆடைகளும் அணிவிக்கப்படுகின்றன.

பஞ்சலிங்கங்கள்: மூலவருக்குப் பின்புறம் உள்ள சுரங்க அறையில் முருகன் பூஜித்த 'பஞ்சலிங்கங்களைக்' காணலாம்.

நிவேதனம்: மூலவர் துறவுக் கோலத்தில் இருப்பதால் அவருக்கு உப்பு, புளி, காரம் இல்லாத உணவுகளே (சர்க்கரை பொங்கல், சுத்த அன்னம்) படைக்கப்படுகின்றன. இல்லறக் கோலத்தில் இருக்கும் சண்முகருக்கு பால் பாயாசம், புளியோதரை உட்பட ஆறு வகை நிவேதனங்கள் படைக்கப்படுகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள இத்திருத்தலம், இன்றும் தேர்தலில் போட்டியிடுபவர்கள் நம்பிக்கைக்குரிய வெற்றித் தலமாகத் திகழ்கிறது.

## தினம் ஒரு தலைவர்கள்

# சுபாஷ் சந்திர போஸ் வரலாறு

இந்திய விடுதலைப் போரின் முக்கியமான ஆளுமையும், ஆங்கிலேய அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போர் புரிந்த ராணுவப் படையை வழிநடத்தியவருமான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், 1897 ஜனவரி 23-ல் ஒடிசா மாநிலத்தில் உள்ள கட்டக்கில் பிறந்தார்.

ஆங்கிலேயே அரசுக்கு எதிரான தேசியவாத செயல்பாடுகளில் பங்கேற்றதற்காக கொல்கத்தா மாநிலக் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார். அங்கு ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் பட்டப் படிப்பை நிறைவுசெய்த பின்னர் இங்கிலாந்து சென்று, ஐசிஎஸ் தேர்ச்சி பெற்றார். ஆனால், ஆங்கிலேய அரசின் கொடுமைகளை எதிர்த்து, பிரிட்டிஷ் அரசின் கீழ் பணியாற்ற மறுத்து, விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற போஸ், வங்கத்தில் சித்தரஞ்சன் தாஸின் கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் பணியாற்றத் தொடங்கினார். ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டத்தால் 1921-ல் கைது செய்யப்பட்டார். புரட்சிக் குழுக்களுடன் தொடர்பில் இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில், பிரிட்டிஷ் அரசு அவரை பர்மாவுக்கு நாடு கடத்தியது.

1927-ல் தாய்நாடு திரும்பிய அவர், வங்க காங்கிரஸ் கிளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸ் பொதுச் செயலாளராகி, நேருவுடன் இணைந்துப் பணியாற்றினார். ஆங்கிலேய அரசுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆதரவாக இருந்ததற்காக பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார் போஸ்.

உடல் நலிவுற்றிருந்த போதும் ஐரோப்பா சென்று அங்குள்ள தலைவர்களை சந்தித்து, இந்திய விடுதலைக்கு ஆதரவு திரட்டினார். மீண்டும் இந்தியா திரும்பி 1938-ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒருகட்டத்தில் காந்தி-போஸ் ஆகியோருக்கிடையே முரண்கள் அதிகரித்தன. 1939-ல் மீண்டும் காங்கிரஸ் தலைவராக போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். காந்தியின் ஆதரவைப் பெற்ற வேட்பாளர் தோற்றார். ஆனால், காந்தியின் ஆதரவின்றி பதவியில் தொடர விரும்பாமல், போஸ் பதவியைத் துறந்தார். விடுதலைக்குப் போரிட்ட புரட்சிகர சக்திகளை ஒன்றுதிரட்டும் நோக்கில் ஃபார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கினார்.

1940-ல் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதால் அச்சமடைந்த பிரிட்டிஷ் அரசு, அவரை விடுவித்தது. பின்னர், கொல்கத்தாவிலிருந்து காபூல், மாஸ்கோ வழியாக ஜெர்மனியை அடைந்தார். இரண்டாம் உலகப் போர் நேரத்தில் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றுவதற்காக, ஜெர்மனியில் இருந்த இந்தியர்களை உள்ளடக்கிய ராணுவப் படையுடன் இணைந்து செயல்பட்டார். அங்குதான் அவருக்கு 'நேதாஜி' (மரியாதைக்குரிய தலைவர்) என்ற அடைமொழி வழங்கப்பட்டது.



இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் கூட்டாளியாக இருந்த ஜப்பான் தென்கிழக்கு ஆசியா மீது படையெடுத்த போது, போஸ் ஜப்பானுக்குச் சென்றார். தென்கிழக்கு ஆசியாவில் அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு கலைக்கப்பட்டிருந்த இந்திய தேசிய ராணுவம் புத்துயிர் பெற்று, போஸின் தலைமையில் இயங்கத் தொடங்கியது.

"உங்கள் ரத்தத்தைக் கொடுங்கள், நான் விடுதலை பெற்றுக் கொடுக்கிறேன்" என்பது போன்ற அவரது புகழ் பெற்ற வாசகங்களாலும், களச் செயல்பாடுகளாலும் ஈர்க்கப்பட்டு பர்மா, மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் வாழ்ந்த இந்திய இளைஞர்கள் பலர், இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்து பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராடத் தொடங்கினர்.

ஜப்பான் படைகளுடன் கோஹிமா, இம்பால் வழியாக 'இந்திய தேசிய ராணுவம்' (ஐஎன்ஏ) இந்தியாவுக்குள் நுழைந்தது. ஜப்பான் அரசின் முழுமையான ஆதரவு கிடைக்காததால், பிரிட்டிஷ் இந்திய ராணுவத்திடம் தோல்வியுற்று ஐஎன்ஏ பின்வாங்கியது. இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனிடம் ஜப்பான் சரணடைந்ததை அடுத்து, இந்திய தேசிய ராணுவத்தில் எஞ்சியவர்களும் சரணடைய நேர்ந்தது. 1945 ஆகஸ்ட் 18 ஜப்பான் ஆக்கிரமிப்பிலிருந்த தைவானில் ஒரு விமான விபத்தில் போஸ் மரணமடைந்ததாக ஜப்பான் அரசு அறிவித்தது. போஸின் ஆதரவாளர்கள், அவரது மரணத்துக்கு சொல்லப்பட்ட காரணத்தை ஏற்க மறுத்தனர். அவரது மரணத்தில் இன்றுவரை மர்மம் நிலவுகிறது.

PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்



# 2026-இல் இந்திய பொருளாதார வளர்ச்சி 6.5%: ஐஎம்எஃப் கணிப்பு




புதுடெல்லி, ஏப்.16:

நிகழ் நிதியாண்டில் (2026-27) இந்திய பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதமாக இருக்கும் என்று சா்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) கணித்துள்ளது.

இது தொடா்பாக ஐஎம்எஃப் வெளியிட்ட உலகப் பொருளாதார கண்ணோட்டத்தில், 'கடந்த 2025-ஆம் ஆண்டின் வலுவான நிதிசாா்ந்த பலன்கள், இந்தியப் பொருள்கள் மீது அமெரிக்க விதித்த கூடுதல் வரி 50 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைக்கப்பட்டது ஆகியவை மத்திய கிழக்குப் போரால் ஏற்படும் பாதகமான தாக்கத்தை பின்னுக்குத் தள்ளியுள்ளன. எனவே, 2026-இல் இந்தியாவின் பொருளாதார வளா்ச்சி 6.5 சதவீதமாக இருக்கும். 2027-ஆம் ஆண்டில் இந்திய பொருளாதார வளா்ச்சி 6.5 சதவீதமாக நீடிக்கும்.

மேற்காசிய போா் குறுகிய காலமே நீடிக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், உலகப் பொருளாதார வளா்ச்சி மிதமாக மந்தமடையக் கூடும் என எதிா்பாா்க்கப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உடைமைகள் வைக்கும் இடத்தில் பணம் வசூலித்தவா் பணி நீக்கம்



புதுடெல்லி, ஏப்.16:


திருமலையில் உள்ள பக்தா்களின் உடைமைகள் வைக்கும் மையத்தில் பக்தா்களிடம் பணம் வசூலித்த ஒப்பந்த ஊழியா் நீக்கப்பட்டாா்.

திருமலை தேவஸ்தானம் பக்தா்களின் உடைமைகளைபாதுகாக்கும்பணியை முற்றிலும் இலவசமாக வழங்கி வருகிறது. எந்தவொரு பக்தரும் தங்களது உடைமை பெட்டிகளுக்குப் பணம் செலுத்தத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

விதிமுறைகளை மீறி யாரேனும் பணம் வசூலித்தால், பக்தா்கள் ஊழல்தடுப்புக்கட்டுப்பாட்டு எண்: 98668 98630-ல் புகாா் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறாா்கள்.

பக்தா்களிடம் பணம் வசூலித்த புகாா் தொடா்பாக ஒப்பந்த ஊழியா் நரசிம்ம ரெட்டி பணியிலிருந்து நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உலகின் மருந்தக ஆராய்ச்சி மையம் இந்தியா: பிரதமர் மோடி பெருமிதம்



புதுடெல்லி, ஏப்.16:

இந்திய மருந்துத் துறை, உலகின் மருந்தகம் என்ற நிலையிலிருந்து, தற்போது உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளின் மையமாக உருவெடுத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி நேற்று பெருமிதம் தெரிவித்தார்.

மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா எழுதியுள்ள கட்டுரை ஒன்றைப் பகிர்ந்துள்ள பிரதமர், தனது எக்ஸ் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது: இந்தியா இப்போது மலிவு விலையில் மருந்துகளை வழங்கும் உலகளாவிய விநியோகஸ்தர் என்ற நிலையைக் கடந்து, ஆராய்ச்சி சார்ந்த வளர்ச்சியில் தற்போது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. உலகின் மருந்தகம் என்ற நிலையிலிருந்து கண்டுபிடிப்புகளின் மையமாக இந்தியாவின் மருந்துத் துறை முன்னேறி வருகிறது.

தற்போதைய அரசு, விரிவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயலாஜிக்ஸ், பயோசிமிலர்ஸ் மற்றும் அடுத்த தலைமுறைக்கான நவீன சிகிச்சை முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மேலும், உலகளாவிய மருந்துத் துறைப் போட்டியில் இந்தியா தன்னை எவ்வாறு முன்னிலைப்படுத்தி வருகிறது என்பதை விவரிக்கும் மத்திய அமைச்சர் நட்டாவின் இந்தக் கட்டுரை, அனைவரும் படிக்க வேண்டிய ஒன்று. இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் தொடர்ச்சியான கொள்கை ஆதரவு மற்றும் தொலைநோக்குப் பார்வை காரணமாக, கடந்த சில ஆண்டுகளில் இந்திய மருந்துத் துறையின் தடம் மாறியுள்ளது. இந்தியா இனி பொதுவான 'ஜெனரிக்' மருந்துகளை அதிக அளவில் உற்பத்தி செய்வதுடன் மட்டும் நின்றுவிடாமல், காம்ப்ளக்ஸ் மருந்து மேம்பாடு மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சித் திறன்களில் அதிக முதலீடு செய்து வருகிறது. குறிப்பாக, உலகளாவிய மருந்துத் துறையின் அடுத்தகட்ட வளர்ச்சியைத் தீர்மானிக்கக் கூடிய பயலாஜிக்ஸ் போன்ற பிரிவுகளில் இந்தியா அதிக கவனம் செலுத்தி வருகிறது.

ஜெனரிக் மருந்து உற்பத்தியில் முன்னிலை வகித்ததால் நீண்டகாலமாக இந்தியா உலகின் மருந்தகம் என்று அழைக்கப்பட்டது. தற்போது, அந்த வளர்ச்சியிலிருந்து, புத்தாக்கம் மற்றும் கண்டுபிடிப்புகளை நோக்கிய வளர்ச்சிக்கு மாற இந்தியா தயாராகிவிட்டது என்று மத்திய அமைச்சர் நட்டா தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# ரூ.50 கோடி சட்டவிரோத பணப் பரிவர்த்தனை: ஐ-பேக் நிறுவன இயக்குநருக்கு 10 நாள் காவல்

புதுடெல்லி, ஏப்.16:

அரசியல் ஆலோசனை வழங்கும் ஐ-பேக் நிறுவனத்தில் ரூ.50 கோடி அளவுக்கு சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடந்துள்ளது தெரியவந்துள்ளது. இதையடுத்து ஐ-பேக் நிறுவன இயக்குநர் வினேஷ் சந்தேலை 10 நாள் அமலாக்கத் துறை அதிகாரிகள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிக்கு ஆலோசனை வழங்கவும், தேர்தல் நேரத்தில் வழி நடத்தவும் ஐ-பேக் அரசியல் ஆலோசனை நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த ஐ-பேக் நிறுவனத்தின் இணை நிறுவனராகவும், இயக்குநராகவும் இருப்பவர் வினேஷ் சந்தேல்.

இந்நிலையில் அண்மையில் அமலாக்கத்துறை அதிகாரிகள், ஐ-பேக் நிறுவனத்தின் மீது ஒரு வழக்குப் பதிவு செய்தனர். அதில் ரூ.50 கோடி அளவுக்கு சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து நிறுவனத்தில் 33 சதவீத பங்குகளை வைத்துள்ள வினேஷ் சந்தேலை அமலாக்கத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

அவர் மீது சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் (பிஎம்எல்ஏ) கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு டெல்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த கூடுதல் செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி ஷெபாலி பர்னாலா, வினேஷ் சந்தேலை 10 நாள் அமலாக்கத்துறை அதிகாரிகள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தார்.

இந்நிலையில் இந்த வழக்கு அரசியல் உள் நோக்கம் கொண்டது என்று வினேஷ் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் விகாஸ் பஹ்வா தெரிவித்தார்.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை

புதுடெல்லி, ஏப்.16:

மணிப்பூரில் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு இடையே செவ்வாய்க்கிழமை மோதல் உருவாகி வன்முறை ஏற்பட்டது.

இதுகுறித்து மாநில காவல் துறையினா் கூறியதாவது:

விஷ்ணுபூா் மாவட்டத்தில் உள்ள ட்ரோங்லாவ்பி பகுதியில் அண்மையில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 2 சிறாா்கள் உயிரிழந்த சம்பவத்துக்கு எதிராக, திங்குங்கெய் பகுதியில் உள்ளூா் மக்கள் செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனா். அப்போது அங்கு ஆயுதங்களுடன் சந்தேகத்துக்குரிய நபா்கள் நடமாடுவதாக வதந்தி பரவி பதற்றம் அதிகரித்தது.

இதனால் அங்கு வந்த பாதுகாப்புப் படையினரின் வாகனங்களை உள்ளூா் மக்கள் தடுத்து நிறுத்தினா். அப்போது கூட்டத்தில் இருந்த சிலா் வாகனங்களைச் சேதப்படுத்தி, அவற்றுக்குத் தீ வைத்தனா். பாதுகாப்பு படை வீரா்களை சிறைபிடிக்கவும் அவா்கள் முயற்சித்தனா்.

இதையடுத்து அந்தப் பகுதிக்கு கூடுதல் படைகள் அனுப்பப்பட்ட நிலையில், கூட்டத்தைக் கலைப்பதற்கு கண்ணீா் புகை குண்டுகள் வீசப்பட்டன. இந்த வன்முறை திங்குங்கெய்க்கு அருகில் உள்ள நிங்தோகோங் பகுதிக்கும் பரவியது. இந்த வன்முறை தொடா்பாக 4 போ் கைது செய்யப்பட்டனா் என்று தெரிவித்தனா்.

வன்முறை காரணமாக அந்த மாவட்டத்தில் அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை, பிஎன்எஸ்எஸ் சட்டத்தின் 163-ஆவது பிரிவின் கீழ், மாவட்ட ஆட்சியா் தடை உத்தரவுகளைப் பிறப்பித்தாா்.

# தானம் பெற்ற இதயம் 85 நிமிடத்தில் 98 கி.மீ. பயணம்

புதுடெல்லி, ஏப்.16:

மூளைச்சாவு அடைந்த நபரிடமிருந்து தானமாக பெற்ற இதயம் 85 நிமிடங்களில் 98 கி.மீ தூரத்துக்கு விரைவாககொண்டுசெல்லப்பட்டு வெற்றிகரமாக பொருத்தப்பட்டது.

ஹரியானாவின் ரோதக் நகரில் உள்ள பிஜிஐஎம்எஸ் மருத்துவமனையில் 37 வயது நபர் ஒருவர் மூளையில் ரத்தக் கசிவு ஏற்பட்டு சுயநினைவின்றி அனுமதிக்கப்பட்டார். அவர் மூளைச் சாவு அடைந்ததால், அவரது உடல் உறுப்புகளை தானமாக வழங்க அவரது குடும்பத்தினர் முடிவு செய்தனர்.

டெல்லி ஓக்லா பகுதியில் உள்ள ஃபோர்டிஸ் எஸ்கார்ட்ஸ் இதய சிகிச்சை மையத்தில் ஒருவர் இதய மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருந்தார். இதனால் ரோதக் நகரில் இருந்து இதயத்தை எடுத்து ஓக்லா கொண்டு சென்று பொருத்த மருத்துவர்கள் முடிவு செய்தனர். ரோதக் மற்றும் ஓக்லா இடையேயான தூரம் 98 கி.மீ. ஆகும். தானமாக பெறப்படும் இதயத்தை குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் பொருத்த வேண்டும். எனவே இதை விரைவாக கொண்டு செல்ல போக்குவரத்து போலீஸாரின் உதவி நாடப்பட்டது.

மூளைச்சாவு அடைந்த நபரிடமிருந்து இதயத்தை எடுக்கும் அறுவை சிகிச்சையை மதியம் 2.20 மணிக்கு தொடங்கிய மருத்துவர்கள் 2.50 மணிக்கு முடித்தனர்.

அதன் பின் ரோதக் நகரிலிருந்து ஆம்புலன்ஸ் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட இதயம் மாலை 4.15 மணிக்கு டெல்லி மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது. ஆம்புலன்ஸ் வாகனத்துக்கு தடையற்ற போக்குவரத்தை போலீஸார் செய்து கொடுத்தனர். இதனால் 85 நிமிடத்தில் தானமாக பெற்ற இதயம் கொண்டு செல்லப்பட்டு, இதய செயலிழப்பால் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நபருக்கு மருத்துவர்கள் வெற்றிகரமாக பொருத்தினர்.





மற்ற உடல் உறுப்புகள்.. மூளைச்சாவு அடைந்த நபரின் மற்ற உடல் உறுப்புகள் இதர மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு பலருக்கு பொருத்தப்பட்டது. நுரையீரல் ஆர்டிமிஸ் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கல்லீரல் மற்றும் கணையம் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. சிறுநீரகம் மற்றும் கார்னியா ஆகியவை ரோதக் பிஜிஐஎம்எஸ் மருத்துவமனையிலேயே பிற நபர்களுக்கு பொருத்தப்பட்டது. ஒருவரின் உடல் உறுப்பு தானம், பல பேரின் உயிரைக் காப்பாற்றியுள்ளது.

# "இந்த ஆபத்தை முன்னரே கணித்தவர் ஸ்டாலின்" தொகுதி மறுவரையறை குறித்து ரேவந்த் ரெட்டி எச்சரிக்கை

ஹைதராபாத், ஏப்.16:

மக்களவைத் தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாகப்பிரதமர் நரேந்திர மோடிக்கு தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி கடிதம் எழுதியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் தமிழக முதல்வர் ஸ்டாலினை குறிப்பிட்டு, அவர் கூறியிருப்பதாவது: "அன்புள்ள ஸ்டாலின், இந்த ஆபத்தை முன்கூட்டியே உணர்ந்து, கடந்த ஆண்டு மார்ச் மாதம் சென்னையில் தென்னிந்தியத் தலைவர்களை ஒன்றிணைத்து மாநாட்டை ஒருங்கிணைத்த முதல் தலைவர்களில் நீங்களும் ஒருவர்.

நமது அரசியல் உரிமைகள் மீதான இந்தத் தாக்குதலுக்கு எதிராக நாம் ஒன்றிணைய வேண்டும். டெல்லியில் நமது குரலைப் பாதுகாக்க வேண்டும். இந்த மிகச் சிறப்பான நாளில், "கற்பி, போராடு, ஒன்றுசேர்" என்ற பாபாசாகேப் அம்பேத்கரின் தாரக மந்திரத்தை உத்வேகமாக எடுத்துக்கொள்வோம். ஒன்றாக அணிவகுப்போம்" என்று தெரிவித்துள்ளார்,

அத்துடன் மக்களவைத் தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்தையும் ரேவந்த் ரெட்டி அதில் இணைத்துள்ளார். அதில், "குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காகத் தென்னிந்திய மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கையானது கூட்டாட்சித் தத்துவத்திற்கும், தென்னிந்தியாவின் அரசியல் குரலுக்கும் எதிரானது என்று அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஏழுமலையானுக்கு ரூ.1.01 கோடி நன்கொடை

ஐதராபாத், ஏப்.16:

ஹைதராபாதைச் சேர்ந்த "வர்மா ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், திங்கட்கிழமை தேவஸ்தானத்தின் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிராணதான அறக்கட்டளைக்கு ரூ.1,01,01,116 நன்கொடையாக வழங்கியது.

இந்நிகழ்வின்போது, அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அல்லூரி வர்மா, ஏழுமலையான் கோயில் ரங்கநாயகர் மண்டபத்தில் வைத்து, நன்கொடைக்கான வரைவோலையை கூடுதல் செயல் அதிகாரி வெங்கையா சௌத்ரியிடம் அளித்தார்.

# 75 ஆண்டுகளை நிறைவு செய்த தெற்கு ரயில்வே

புதுடெல்லி, ஏப்.16:

தெற்கு ரயில்வே மண்டலம் தொடங்கப்பட்டு செவ்வாய்க்கிழமையுடன் (ஏப். 14) 75 ஆண்டுகளை நிறைவு செய்தது.

இது குறித்து தெற்கு ரயில்வே துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 1951- ஆம் ஆண்டு ஏப்.14- ஆம் தேதி தெற்கு ரயில்வே மண்டலம் அமைக்கப்பட்டது. அப்போதைய மதராஸ் மற்றும் தெற்கு மகாராஷ்டிரா ரயில்வே, தெற்கு இந்திய மற்றும் மைசூர் மாநில ரயில்வே என மூன்று பிரிவுகளை ஒருங்கிணைத்து நிர்வகிக்கப்பட்டு வந்தது. அதன்பின், நிர்வாக ரீதியாக தமிழகத்தில் சென்னை, திருச்சி, சேலம், மதுரை மற்றும் கேரளத்தைச் சேர்ந்த பாலக்காடு, திருவனந்தபுரம் என 6 கோட்டங்கள் தெற்கு ரயில்வேயின் கட்டுப்பாட்டில் உள்ளன.

சுதந்திரத்துக்குப் பிறகு 1856- ஆம் ஆண்டில் ராயபுரம் முதல் ஆற்காடு எனப்படும் வாலாஜா வரை தெற்கு ரயில்வேயின் முதல் ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

தெற்கு ரயில்வேயின் நிர்வாக ரீதியிலான முன்னேற்ற மாற்றங்களாக, கடந்த 1966- ஆம் ஆண்டு தெற்கு மத்திய ரயில்வே மண்டலம் உருவானது. கடந்த 2003 -ஆம் ஆண்டு தென்மேற்கு ரயில்வே மண்டலம் ஏற்படுத்தப்பட்டது.

வளர்ச்சி: தற்போதைய தெற்கு ரயில்வே மண்டலத்தில் தமிழகம், கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலப் பகுதிகள் உள்ளடங்கியுள்ளன. சென்னையில் மிக பாரம்பரியமிக்க தெற்கு ரயில்வே அலுவலக வளாகக் கட்டடம் நூற்றாண்டைக் கடந்து, சென்னை சென்ட்ரல் அருகே அமைந்துள்ளது.

கடந்த 1856 முதல் தற்போது வந்தே பாரத் உள்ளிட்ட நவீன ரயில்களை இயக்கும் அளவுக்கு தெற்கு ரயில்வே வளர்ச்சியடைந்துள்ளது.

வருங்காலத்தில் புல்லட் ரயிலும் தெற்கு ரயில்வே கட்டுப்பாட்டில் இயக்கப்படும். யுனெஸ்கோ பாரம்பரிய பட் டியலில் இடம் பெற்ற நீலகிரி மலை ரயில், நாட்டின் முதல் செங்குத்தாக உயர்த்தி, இறக்கும் வகையிலான பாம்பன் ரயில் பாலம் ஆகியவை தெற்கு ரயில்வே மண்டலத்தின் முக்கிய வளர்ச்சியின் அடையாளமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷிய கச்சா எண்ணெய் இறக்குமதி மதிப்பு: மார்ச் மாதத்தில் மூன்று மடங்கு உயர்வு

புதுடெல்லி, ஏப்.16:

ஐரோப்பிய ஆய்வுநிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 2026, மார்ச் மாத நிலவரப்படி ரஷிய எரிபொருள்களை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது. முதலிடத்தில் சீனா உள்ளது.

ஒட்டுமொத்தமாக மார்ச் மாதத்தில் ரஷியாவிடம் இருந்து ரூ.64,000 கோடிக்கு (5.8 பில்லியன் யூரோ) ஹைட்ரோகார்பன் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இதில் கச்சா எண்ணெய் இறக்குமதி மூன்று மடங்கு அதிகரித்து ரூ.58,200 கோடியாக உயர்ந்துள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் நிலக்கரியும் பிற எண்ணெய் பொருள்களும் அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

# உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் பாதுகாப்பு: யுஜிசி வழிகாட்டுதல் வெளியீடு

புதுடெல்லி, ஏப்.16:

பல்கலைக்கழக மானியக்குழு(யுஜிசி) செயலர் மணிஷ் ஆர்.ஜோஷி, அனைத்து விதமான உயர்கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: உயர்கல்வி நிறுவன வளாகங்களில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது நமது கடமை. இதுசார்ந்து அவ்வப்போது வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுவருகின்றன. அதன்தொடர்ச்சியாக தற்போது திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, கல்லூரிகளில் ராகிங் தடுப்பு, பணிபுரியும் பெண்கள் மற்றும் மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தலை தடுக்க நடவடிக்கை, குறைதீர்ப்பாளர் நியமனம், கல்விக்கட்டணம் மற்றும் அசல் சான்றிதழ்களை திரும்பப்பெறுதல் உள்ளிட்ட வழிகாட்டுதல்கள் தீவிரமாக பின்பற்றப்பட வேண்டும். குறிப்பாக, ராகிங் தடுப்புக் குழு, குறைதீர்க்கும் பிரிவு போன்ற பல்வேறு குழுக்கள் மற்றும் பிரிவுகள் அமைக்கப்படுவதுடன், அவை திறம்பட செயல்படுவதை கல்லூரிகள் உறுதிசெய்ய வேண்டும். இந்தக் குழுக்கள் குறித்த விவரங்களை உயர்கல்வி நிறுவனங்கள் தங்களது அதிகாரபூர்வ இணையதளத்தில் பதிவேற்ற வேண்டும். இதுதவிர புகார்கள் மற்றும் குறைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளிப்படையான முறையில் சரிசெய்ய வேண்டும். மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்குதலை மேம்படுத்த வேண்டும். சிசிடிவி கண்காணிப்பு போன்ற வளாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்ய வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.




## சாத்தூர் திமுக வேட்பாளர் வீட்டில் 122 பவுன் நகை திருட்டு




**சாத்தூர், ஏப்.16:** விருதுநகர் மாவட்டம் சாத்தூர் தொகுதி திமுக வேட்பாளர் வீட்டில் 122 பவுன் தங்க நகைகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக சார்பில் கடற்கரைராஜ் போட்டியிடுகிறார்.

இவர் சாத்தூர் அருகே உள்ள வெங்கடாசலபுரத்தைச் சேர்ந்தவர். இவரது மனைவி நிர்மலா, முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்.

நேற்று முன்தினம் இரவு சாத்தூர் தொகுதிக்கு உட்பட்ட சத்திரப் பட்டிபகுதியில் திமுக வேட்பாளர் கடற்கரை ராஜூவை ஆதரித்து மார்க் சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் பிரச்சாரம் செய்தார்.

வேட்பாளர் கடற்கரை ராஜ் வீட்டில் தேர்தல் பணி தொடர்பாக பலர் வந்து சென்றனர். அதைப் பயன்படுத்தி மர்ம நபர்கள் சிலர் நேற்று முன்தினம் இரவு வீடு புகுந்து 122 பவுன்தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று காலையில் வீட்டிலிருந்த பீரோவை குடும்பத்தினர் பார்த்த போது அதிலிருந்த நகைகள் திருடுபோனது தெரியவந்தது.

இதுகுறித்து, கடற்கரை ராஜின் மகள் வத்சலாதேவி சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். தடயவியல் நிபுணர் எஸ்ஐ சுரேஷ்குமார் தடயங்களைச் சேகரித்தார்.

மோப்ப நாயும் துப்புத்துலக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. மாவட்ட எஸ்பி ஸ்ரீநாதா விசாரணை மேற்கொண்டார். நகை திருட்டில் ஈடுபட் டோரைப் பிடிக்க காவல் ஆய்வாளர் துரைப்பாண்டி தலைமையில் தனிப் படை அமைத்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 14 வயது சிறுமியிடம் அத்துமீறிய முதியவர் போக்சோ சட்டத்தில் கைது

**தூத்துக்குடி, ஏப்.16:** தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, பசுவந்தனை சாலையில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் கணபதி (வயது 61). இவர் 14 வயது சிறுமியிடம் பாலியல் ரீதியாக அநாகரிகமாக நடந்துகொண்டதாக கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தரப்பில் அளிக்கப்பட்ட புகாரை தொடர்ந்து, கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் முதியவர் கணபதி சிறுமியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டது உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து போலீசார் அவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கணபதியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர். பின்னர் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.


## ராமேசுவரம் மீனவர்கள் 4 பேர் இலங்கை கடற்படையால் கைது.. சிறையில் அடைப்பு..

**ராமேசுவரம், ஏப்.16:** ராமேசுவரத்தில் இருந்து மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதும், படகுகள், வலைகள் சேதப்படுத்தப்படுவதும், கைது செய்யப்படும் சம்பவங்களும் அவ்வப்போது நடக்கின்றன. இந்தநிலையில் ராமேசுவரத்தில் இருந்து நேற்று முன்தினம் 200-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு சென்று இருந்தனர்.

இதில் ராமேசுவரத்தை சேர்ந்த சேசூராஜா என்பவருக்கு சொந்தமான ஒரு விசைப்படகில் சக்திவேல் (வயது 54), அருணகிரி (54), சேகர் (66), பாலு (54) ஆகிய 4 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். இந்த மீனவர்கள் நடுக்கடல் பகுதியில் மீன்பிடித்து கொண்டு இருந்தபோது இலங்கை கடற்படையினர் அங்கு வந்தனர். எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மேற்கண்ட 4 மீனவர்களையும் கைது செய்தனர்.

அவர்களின் விசைப் படகையும் பறிமுதல் செய்தனர். நடுக்கடலில் சிறைபிடிக்கப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள் 4 பேரையும் இலங்கை கிளிநொச்சி கிராஞ்சி கடற்படை முகாமுக்கு அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர். பின்னர் ஏப்-17ம் தேதி வரை மீனவர்களை வவுனியா சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். 61 நாட் கள் மீன்பிடி தடைக்காலம் நேற்று இரவில் இருந்துதான் தொடங்கி உள்ளது.

## கள்ளக்காதல் விவகாரத்தில் வாலிபர் அடித்துக் கொலை: பெண் உள்பட 3 பேர் கைது



**தூத்துக்குடி, ஏப்.16:** தூத்துக்குடி மாவட்டம், மணியாச்சி அருகே மகாராஜபுரம் காலனி தெருவைச் சேர்ந்தவர் கணேசன் (வயது 25). இவர் நேற்று அந்தப் பகுதியில் உள்ள கல்லறை அருகே மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அவரது நெற்றி, வலது தொடை மற்றும் இரண்டு கால்களிலும் பலத்த காயங்கள் இருந்தன. இதுகுறித்த தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த மணியாச்சி போலீசார், உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த மரணம் குறித்து டி.எஸ்.பி. மேற்பார்வையில் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். இதில் அதே பகுதியைச் சேர்ந்த கனகவல்லி(33) என்பவருடன் கணேசனுக்கு கடந்த ஓராண்டாக தவறான உறவு இருந்தது தெரியவந்தது. சந்தேகத்தின் அடிப்படையில் கனகவல்லியிடம் நடத்திய விசாரணையில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

கனகவல்லி அளித்த வாக்குமூலத்தில் “கணேசனுடன் ஓராண்டாக தொடர்பு இருந்தது. ஆனால், அவர் அடிக்கடி உடலுறவிற்கு வற்புறுத்தி எனக்கு அழுத்தம் கொடுத்து வந்தார். இதனால் ஆத்திரமடைந்த நான், இதுகுறித்து எனது சகோதரர் மகனிடம் கூறினேன். அவரைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டோம்.

திட்டத்தின்படி, நேற்று இரவு 11 மணியளவில் கணேசனை சம்பவ இடத்திற்கு வருமாறு கனகவல்லி அழைத்துள்ளார். அங்கு கணேசன் வந்தபோது, மறைந்திருந்த கனகவல்லியின் உறவினர் மற்றும் அவரது நண்பர் ஆகிய 2 பேரும் மரக்கட்டையால் கணேசனை சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் பலத்த காயமடைந்த கணேசன் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக கனகவல்லி மற்றும் தலைமறைவாக இருந்த மற்ற 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். கொலைக்கு பயன்படுத்தப்பட்ட மரக்கட்டைகளையும் போலீசார் பறிமுதல் செய்தனர். தவறான உறவால் ஏற்பட்ட தொல்லை காரணமாக திட்டமிட்டு வாலிபர் கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தேர்தலையொட்டி சென்னை மாநகராட்சி ஏற்பாடு: 3 ஆயிரம் ஆட்டோக்களில் ஸ்டிக்கர் ஒட்டி விழிப்புணர்வு



**சென்னை, ஏப்.16:** தேர்தலையொட்டி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சென்னையில் 3 ஆயிரம் ஆட்டோக்களில் மாநகராட்சி சார்பில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப். 23-ம் தேதி நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவை தொகுதிகளிலும் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் நோக்கத்துடன், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிலம்பம், பொய்க்கால் குதிரையாட்டம், புலியாட்டம், பொம்மலாட்டம், மல்லர் கம்பம் மற்றும் பறை இசை போன்ற கலை நிகழ்ச்சிகள் சென்னை முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல், இளைய தலைமுறையைக் கவரும் வகையில் கானா பாடல்கள், டிஜே இசை மற்றும் பொது இடங்களில் ‘ஃபிளாஷ் மாப்’ எனப்படும் திடீர் நடனக் குழுக்களின் கலை நிகழ்ச்சிகளும் மாநகராட்சி சார்பில் அரங்கேற்றப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பொதுமக்களிடையே நேரடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 3 ஆயிரம் ஆட்டோக்களில் தேர்தல் விழிப்புணர்வு விளம்பரங்கள் ஒட்டும் பணி, நேற்று தொடங்கியது.

இதையொட்டி, கண்ணப்பர் திடல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆட்டோக்களின் பின்புறம் ‘போடுவோம் ஓட்டு, வாங்க மாட்டோம் நோட்டு’ மற்றும் ‘தேர்தல் நாள்: 23 ஏப்ரல் 2026’ ஆகிய வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

மேலும், நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆட்டோ ஓட்டுநர்கள் அனைவரும், வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் தங்களது இடது ஆள்காட்டி விரலை உயர்த்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த ஆட்டோக்கள் சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் சென்று, விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளன.

# சென்னை இணைப்புப் பெட்டி தொழிற்சாலையில் நாட்டின் முதல் வந்தே பாரத் சரக்கு ரயில் தயாரித்து அனுப்பிவைப்பு



**சென்னை, ஏப்.16:** உலகப் புகழ்பெற்ற ரயில் பெட்டி தயாரிப்பு தொழிற்சாலையான சென்னை ஐசிஎஃப்-ல், வந்தே பாரத் ரயில், எல்எச்பி என்னும் நவீன பெட்டி ரயில், ஏசி மின்சார ரயில், மெட்ரோ ரயில் உட்பட பல்வேறு ரயில்களுக்கான பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

குறிப்பாக, வந்தேபாரத் ரயில்கள் தயாரிப்பில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றன. அந்த வகையில், வந்தே பாரத் சரக்கு ரயிலை வடிவமைத்து, தயாரித்து வழங்க ரயில்வே வாரியம் கடந்த 2022-ம் ஆண்டு உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து, சரக்கு ரயில் வடிவமைப்புக்கு ரயில்வே வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, வந்தே பாரத் சரக்கு ரயில் தயாரிக்கும் பணி சென்னை ஐசிஎஃப்-ல் தொடங்கி நடைபெற்று வந்தது. இந்நிலையில், அண்மையில் வந்தே பாரத் சரக்கு ரயில் தயாரிப்பு பணி முழுமையாக நிறைவடைந்தது.

16 பெட்டிகளைக் கொண்ட இந்த ரயில், மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. உணவு பொருட்களை பதப்படுத்தும் வசதி, பொருட்களை பாதுகாப்பாக கையாளும் வசதி போன்றவை இடம் பெற்றுள்ளன.

இந்த ரயில், ஐசிஎஃப்-ல் இருந்து சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. விரைவில், ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலை அமைப்பால் (ஆர்டிஎஸ்ஓ) முழு சோதனைக்கு உட்படுத்தப்பட இருக்கிறது.

இது குறித்து, ஐசிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: பெரிய நகரங்களில் சரக்கு ரயில் தேவை அதிகரித்துள்ளது. குறிப்பாக, ஆன்லைனில் ஷாப்பிங் செய்வது அதிகரித்துள்ளது. அதுபோல, உணவு பொருட்கள் கையாள்வதும் அதிகரிக்கிறது.

இ-காமர்ஸ் நிறுவனங்கள், தங்கள் பொருட்களை பொதுமக்களிடம் கொண்டு செல்வதற்கு தற்போது பெரிய அளவில் விமான போக்குவரத்தை நம்புகின்றன. இந்த வணிகத்தில், வந்தே பாரத் சரக்கு ரயில் சேவை ஈடுபடுத்தப்பட உள்ளது.

ஒரே நேரத்தில் 264 டன் சரக்குகளை இந்த ரயிலில் எடுத்து செல்ல முடியும். உள்பகுதி முழுவதும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலால் வடிவமைப்பு, தீ எச்சரிக்கை வசதி, சிசிடிவி கேமரா, சரக்கு கன்டெய்னர்களை லாக் செய்வதற்கு வசதி உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்.


இந்த ரயிலின் சோதனை ஓட்டம் குறித்து, ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: இந்த ரயில் பயன்பாட்டுக்கு வரும் முன்பு, ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலைகள் அமைப்பால் (ஆர்டிஎஸ்ஓ) முழுமையாகச் சோதிக்கப்படும்.

இதற்காக, சென்னை ஐசிஎஃப்-ல் இருந்து மத்திய பிரதேசம், கஜுராஹோவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, மத்திய பிரதேசம் - ராஜஸ்தான் இடையே சோதனை ஓட்டம் நடைபெறும். இது தவிர, பல்வேறு சோதனைகள் மேற்கொள்ளப்படும்.

இந்திய ரயில்வே கட்டமைப்பில் வழக்கமாக சரக்கு ரயில்கள் மணிக்கு 100 கி.மீ.க்கும் குறைவான வேகத்திலேயே இயங்கும். ஆனால், இந்த ரயில் மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் இயங்கும் திறன் வாய்ந்தது.

நாட்டின் மிகவும் பரபரப்பான சரக்கு போக்குவரத்து வழித்தடங்களில் ஒன்றான டெல்லி என்சிஆர் - மும்பை மண்டலங்களுக்கு இடையே இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ரூ.52.33 லட்சம் மதிப்பிலான தங்க கட்டிகள் பறிமுதல்



**சென்னை, ஏப்.16:** சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில், உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட ரூ.52.33 லட்சம் மதிப்பிலான தங்க கட்டிகள், பணம் சிக்கியது.

சென்னை ரயில்வே கோட்ட முதுநிலை கோட்ட பாதுகாப்பு ஆணையர் வல்லேஸ்வர பாபுஜி உத்தரவின் பேரில், சென்ட்ரல் ஆர்பிஎஃப் காவல் ஆய்வாளர் மதுசூதனரெட்டி மேற்பார்வையில் ஆர்பிஎஃப் போலீஸார் மற்றும் தேர்தல் பறக்கும் படையினர் ஆகியோர் நேற்று மதியம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, கோயம்புத்தூரில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு விரைவு ரயில் வந்தது. அதில் இறங்கி வந்த பயணிகளில், ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டது.

அவரை தடுத்து நிறுத்தி, அவரது பைகளை சோதித்தபோது, அதில் ரூ.44,83,257 மதிப்பிலான 4 தங்ககட்டிகள் மற்றும் ரூ.7.50 லட்சம் ரொக்கம் இருந்தது.

இதற்கான ஆவணங்களை அவர் சமர்ப்பிக்கவில்லை. இதுகுறித்து விசாரித்த போது, அந்தநபர் சேலத்தைச் சேர்ந்த பத்மநாபன் ஜெயராஜ் (43) என்பதும், வியாபாரத்துக்காக தங்கக் கட்டிகள், பணத்தை எடுத்து வந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து, தங்கம், ரொக்கப் பணத்தை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து, மேல் நடவடிக்கைக்காக, தங்ககட்டிகள், பணத்தை வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# சிறையில் இருந்து பரோலில் வந்து தாயாரின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற சவுக்கு சங்கர்



**சென்னை, ஏப்.16:** தனது தாயாரின் இறுதிச் சடங்கில் பரோலில் வந்து சவுக்கு சங்கர் பங்கேற்றார். சவுக்கு சங்கர் தாயாரின் மறைவுக்கு பழனிசாமி உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

சவுக்கு மீடியா சிஇஓ வும் யூடியூபருமான சங்கர் மீதான இரு மோசடி வழக்குகளில், ஆதம்பாக்கம், சைதாப்பேட்டை போலீஸார் அவரை 2025 டிச.13-ம் தேதி கைது செய்தனர்.

அவரை ஜாமீனில் விடுவிக்கக் கோரி அவரது தாயார் கமலா தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் மார்ச் 25 வரை அவருக்கு இடைக்கால நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது. அன்றையதினம் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால், அவரை தலைமறைவு குற்றவாளியாக அறிவித்து போலீஸார் தேடி வந்தனர்.

பின்னர் ஆந்திராவில் சவுக்கு சங்கர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மீது குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கிடையே உடல்நலக் குறைவு காரணமாக, சவுக்கு சங்கரின் தாயார் கமலா நேற்று முன்தினம் காலமானார். பெங்களூரு வில்சன் கார்டன் மின் மயானத்தில் நேற்று நடைபெற இருந்த தயாரின் இறுதிச் சடங்கில், பங்கேற்க சவுக்கு சங்கருக்கு ஏப்.13 இரவு 8 மணி முதல் ஏப்.16 இரவு 8 மணி வரை பரோல் வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து தாயார் கமலா வின் இறுதிச் சடங்கில் சவுக்கு சங்கர் கலந்து கொண்டார். சவுக்கு சங்கரின் தாயார் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: யூடியூபர் சவுக்கு சங்கரின் தாயார் கமலா உடல்நலக் குறைவால் காலமான செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன்.

தனது மகன் திமுக அரசை எதிர்த்து பேசிய ஒரே காரணத்துக்காக, காவல் துறையால், திமுக மற்றும் கூட்டணி கட்சி குண்டர்களால் அவர் சந்தித்த துயரங்கள் ஏராளம். தாயை இழந்து வாடும் சவுக்கு சங்கருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்: சவுக்கு சங்கரின் தாயார் மறைவு செய்திகேட்டு வருத்தம் அடைந்தேன். இந்த கடின நேரத்தில் சவுக்கு சங்கரின் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: சவுக்கு சங்கரின் தாயார் காலமான செய்தி வருத்தத்தை அளிக்கிறது. சவுக்கு சங்கருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்: சவுக்கு சங்கரின் தாயார் மறைந்த செய்தியறிந்து ஆழ்ந்த மனத்துயர் அடைந்தேன். சவுக்கு சங்கருக்கு எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

# மீன்பிடி தடைக்காலம் இன்றுமுதல் அமல்: 15 ஆயிரம் விசைப்படகுகள் கடலுக்குச் செல்லாது



**ராமேசுவரம், ஏப்.16:** தமிழகத்தில் 2 மாத கால மீன்பிடித் தடைக்காலம் இன்று (புதன்கிழமை) முதல் அமலுக்கு வருவதால் 15 ஆயிரம் விசைப்படகுகள் கடலுக்குச் செல்லாது.

தமிழகத்தின் வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடல் பகுதிகளில் ஏப்ரல், மே, ஜுன் மாதங்களை மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகளின் இனப்பெருக்க காலமாக, மத்திய மீன்வளத்துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது. மீன் வளத்தை பெருக்கும் நோக்கில் இந்தக் காலகட்டத்தில் விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்படுகிறது.

அதன்படி தமிழகத்தில் இந்த ஆண்டுக்கான 61 நாள் மீன் பிடித் தடைக்காலம் இன்று (புதன்கிழமை) முதல் அமலுக்கு வருகிறது. இந்த தடை ஜுன் 14 வரை 61 நாட்களுக்கு அமலில் இருக்கும்.

இந்த தடைக்காலத்தில் தமிழக அளவில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னைஉள்ளிட்ட 14 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் விசைப் படகுகள் மற்றும் இழுவைப் படகுகளும் கடலுக்குச் செல்லாமல், மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி நங்கூரமிடப்பட்டிருக்கும்.

இந்த இரண்டு மாதங்களில் மீனவர்கள் தங்கள் படகுகளை சீரமைக்கப் பயன்படுத்திக் கொள்வார்கள். மீன்பிடித் தடைக்காலம் அமலுக்கு வந்தவுடன் தமிழகத்தில் மீன்களின் விலையும் உயரத் தொடங்கும்.

அதே சமயம், பாரம்பரிய மீன்பிடி படகுகளான பாய்மரப் படகு, நாட்டுப் படகு மற்றும் கட்டு மரங்கள் வழக்கம் போல கடலுக்குச் செல்லும்.

இதுகுறித்து, ராமேசுவரம் மீனவர்கள் கூறும்போது, மீன்பிடித் தடைக்காலம் அமலுக்கு வந்துள்ள நிலையில், இலங்கை சிறைகளில் 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட 70-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் தண்டனைக் கைதிகளாக உள்ளனர்.

மேலும் சிலர் அதிகளவில் அபராதத் தொகை விதிக்கப்பட்டு கைதிகளாக உள்ளனர். இந்த மீனவர்களை விடுதலை செய்ய மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறினர்.

# தமிழ் புத்தாண்டு: திருத்தணி- திருப்போரூர் முருகன் கோவில்களில் சிறப்பு வழிபாடு- பக்தர்கள் குவிந்தனர்

**திருத்தணி, ஏப் 16:** திருத்தணி முருகன் கோவிலில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு மூலவருக்கு அதிகாலை 4 மணிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் பச்சை மாணிக்க மரகதக்கல் தங்கவேல் தங்க கிரீடம் மற்றும் வைர ஆபரணங்கள் அணிவித்து சிறப்பு தீபாராதனை நடந்தது.

இன்று காலை திருத்தணி நந்தி ஆற்றங்கரையோரம் உள்ள கோட்டா ஆறுமுக சுவாமி கோவில் வளாகத்தில் இருந்து, 1,008 பால் குடங்களை, பக்தர்கள் தலையில் சுமந்தவாறு நகரின் முக்கிய வீதிகள் வழியாகவும், மலைப்படிகள் வழியாக மலைக்கோவில் வளாகத்திற்கு சென்றடைந்தனர்.

பின்னர், காவடி மண்டபத்தில் உற்சவர் முருகப்பெருமானுக்கு பால் அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை, கோவில் அறங்காவலர் குழு தலைவர் ஸ்ரீதரன், இணை ஆணையர் ரமணி, அறங்காவலர்கள் செய்திருந்தனர்.

திருப்போரூர் முருகன் கோவிலில் இன்று அதிகாலை நடை திறக்கப்பட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டதால் சுமார் 2 மணி நேரம் காத்திருந்து முருகப் பெருமானை வழிபட்டனர். முன்னதாக நேற்று நள்ளிரவு திருப்போரூர் முருகன் கோவிலின்துணைக்கோவிலான மலை மீது அமர்ந்து உள்ள கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

நள்ளிரவு 12 மணி அளவில் மலைக்கோவிலுக்கு செல்லும் ஒவ்வொரு படிக்கும் படி பூஜை செய்து பக்தர்கள் வழிபட்டனர். தமிழ் புத்தாண்டையொட்டி நேற்று சென்னையில் இருந்து பாதயாத்திரையாக வருகை தந்த சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் நேற்று பகல் பால்குடம் எடுத்து மாடவீதி வலம் வந்து திருப்போரூர் முருகனுக்கு பாலாபிஷேகம் செய்து வழிபட்டனர்.

ஒரகடம் அடுத்த வல்லக்கோட்டை முருகன் கோவிலில் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு கோ பூஜை, விசுக்கனி தரிசனம் நடைபெற்றது. தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு கருவறை மூலவர் சுப்பிரமணிய சுவாமி முன்னர் 9 தட்டுகளில் ஆரஞ்சு, ஆப்பிள், சாத்துகுடி, அன்னாசி, வாழை, பலா முதலிய பழங்கள், மலர்மாலைகள், கண்ணாடி, உப்பு, அரிசி, பருப்பு வகைகள் மற்றும் மங்கலப் பொருட்கள் வைக்கப்பட்டன. மூலவர் முருகப்பெருமான் முத்தங்கி சேவையில் அருள்பாலித்தார். பிறகு மூலவருக்குப் பலவித ஆராதனைகள் செய்யப்பட்டு விசுக்கனி தரிசனம் நடைபெற்றது.

வருடப்பிறப்பை முன்னிட்டு திரளான பக்தர்கள் காலையிலேயே கோவிலுக்கு வந்து தரிசனம் செய்தனர். தொடர்ந்து 5.15 மணிக்கு உற்சவர் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு சித்திரைக் கல்யாண உற்சவம் நடைபெற்றது. மற்றொரு உற்சவர் கோடையாண்டவருக்கு பாதாம், முந்திரி, ஏலக்காய் மாலைகளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு காட்சியளித்தார்.

23-ந்தேதி கந்த பொடி விழா நடைபெறும்.

இந்நிலையில் சித்திரை மாத பிரமோற்சவம் ஸ்ரீ ஆதி கேசவ பெருமாளுக்கு 10 நாள் உற்சவம் மே மாதம் 1-ந்தேதி தொடங்கி 10 நாட்கள் உற்சவம் நடக்கிறது. ஆதிகேசவா பெருமாள் தேர் திருவிழா மே மாதம் 7-ந்தேதி வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

# சேலத்தில் பறக்கும் படை சோதனை: 3 பேரிடம் ரூ.4.5 லட்சம் பறிமுதல்

**சேலம், ஏப்.16:** தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டு செயல்முறை (Standard Operating Procedure) மற்றும் தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி, முறையான ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் ரூ.10,000/-த்திற்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் ரூ.50,000/- மேல் ரொக்கமாக கொண்டு செல்லப்படும் பணம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்படும்.

பின்பு விசாரணையில் முறையான ஆவணங்களை மேல்முறையீட்டு குழுவிடம் (Appellate authority) தாக்கல் செய்யும் பட்சத்தில் மீண்டும் உரிய நபரிடம் ஒப்படைக்கப்படும்.

இந்நிலையில் சேலம் தெற்கு தொகுதிக்குட்பட்ட சீலநாயக்கன்பட்டி பகுதியில் பறக்கும் படையினர் அதிகாரி வள்ளிமுனியப்பன் தலைமையில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வாழப்பாடி பகுதியை சேர்ந்த பெரியசாமி என்பவர் வந்த காரை சோதனை நடத்தினர். அதில் ரூ.89 ஆயிரம் இருப்பதும் அதற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் அதை பறிமுதல் செய்தனர்.

அதே போன்று செவ்வாய்பேட்டை பகுதியை சேர்ந்த முருகன் என்பவர் ஆவணம் இன்றி எடுத்து வந்த ரூ.2 லட்சத்து 71 ஆயிரத்தை பறிமுதல் செய்தனர்.

அதே போன்று நெத்திமேட்டை சேர்ந்த செல்வராஜ் எடுத்து வந்திருந்த ரூ.96 ஆயிரத்து 800 என 3 பேரிடம் ஆவணம் இன்றி எடுத்து வந்ததாக மொத்தம் ரூ.4 லட்சத்து 56 ஆயிரத்து 800-ஐ பறிமுதல் செய்தனர்.

# கோவையில் ரூ.8 ஆயிரம் மாதிரி கூப்பன் வினியோகம்- தி.மு.க.வினர் மீது வழக்கு

கோவை மாவட்டத்தில் சட்டசபை தேர்தலை ஒட்டி வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்க தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு காட்டூர் அருகே ராம் நகர் விவேகானந்தா ரோடு வி.என்.தோட்டம் பகுதியில், தி.மு.க.வினர் சிலர் வீடு-வீடாக சென்று ரூ.8 ஆயிரம் மாதிரி கூப்பன்களை விநியோகம் செய்ததாக புகார் எழுந்தது.

இதுதொடர்பாக தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக ரவிராஜ் என்பவர் புகார் செய்தார்.

இதைத்தொடர்ந்து மாதிரி கூப்பன்களை வினியோகம் செய்ததாக தி.மு.க. வார்டு செயலாளர் சேதுராமன் மற்றும் ராமமூர்த்தி, மெஜஸ்டிக் சின்னராஜ், கண்ணம்மாள் மற்றும் 2 பெண்கள் மீது காட்டூர் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

# செல்லூர் சுயம்பு வாழவந்த அம்மன் கோவிலில் சித்திரை விஷு கனி பூஜை

**பரமக்குடி, ஏப் 16:** ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ளது செல்லூர் இங்கு பிரசித்தி பெற்ற ஸ்ரீ சுயம்பு வாழவந்த அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் தமிழகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.



இக்கோவிலில் சித்திரை தமிழ் வருடப் பிறப்பு மற்றும் சித்திரை விஷு கனி பூஜை வழிபாடு நடைபெற்றது. சிறப்பு திருமஞ்சனமன அபிஷேகம் மஞ்சள், பால், தயிர், தேன், பன்னீர் அபிஷேகம் செய்து விஷேச தீபாராதனை நடைபெற்றது. இதில் அம்மனுக்கு தைலகாப்பு சந்தனத்தால் அலங்காரம் செய்யப்பட்டு, முக்கனிகள் படைத்து அனைத்து வகையான பூமாலைகள் அணிவிக்கப்பட்டு பக்த்தர்களுக்கு வழங்கப்பட்டது.

கோவிலில் உள்ள விநாயகர், முருகன் ஸ்ரீசிவகாளி, ஆதி முத்துமாரி அம்மன் பெரிய கருப்பு சின்ன கருப்பு, பேச்சியம்மன், நாகம்மன் ஸ்தபகன்னிமார்கள், மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. மதுரை, பரமக்குடி, மானாமதுரை பகுதியில் உள்ள ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு செல்லூர் சுயம்பு வாழ வந்த அம்மனை வழிபாடு செய்தனர்.

# இளையான்குடியில் சித்திரை திருவிழா குதிரை வாகனத்தில் எழுந்தருளிய வாள் மேல் நடந்த அம்மன்

**மானாமதுரை, ஏப்.16:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் பிரசித்தி பெற்ற ஶ்ரீ வாள் மேல் நடந்த அம்மன் கோவில் உள்ளது.

இங்கு ஆண்டுதோறும் நவராத்திரி விழா பத்து நாட்கள் நடைபெறும். சித்திரை தமிழ் வருடப் பிறப்பு முன்னிட்டு நடைபெற்ற விழாவில் வாள்மேல் நடந்த அம்மன் கோவிலில் அம்மனுக்கு காலையில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன.

அதைத்தொடர்ந்து இரவு அம்மன் இராஜாங்க திருக்கோலத்தில் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைக்கு பின்னர் குதிரை வாகனத்தில் எழுந்தருளி திருவீதி வலம் நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை இளையான்குடி ஆயிரவைசிய சபையினர் செய்தனர்.





# குளுகுளு பிரதேசத்தில் வெயில் கொளுத்துகிறது: ஊட்டியில் 24 ஆண்டுகளுக்கு பிறகு 29 டிகிரி வெப்பநிலை பதிவு



**சென்னை, ஏப்.16:** மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் ஊட்டி நகரத்தில் தற்போது சமவெளிக்கு இணையாக வெப்பநிலை அனலாக கொதித்து வருகிறது. இதனால் அந்த குளுகுளு பிரதேசம் தற்போது இயல்பான குளிர்ச்சியை இழந்து காணப்படுகிறது. அதிலும் குறிப்பாக ஊட்டியில் கடந்த சில நாட்களாக அதிகபட்ச வெப்பநிலையாக 26 முதல் 29 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை காணப்படுகிறது. இதனால் அங்கு இதமான காலநிலையை எதிர்பார்த்து வந்த சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்து உள்ளனர்.

ஊட்டியில் நேற்று 29 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவானது. இது கடந்த 24 ஆண்டுகளுக்கு பிறகு காணப்படும் அதிகபட்ச வெப்பநிலையாக கருதப்படுகிறது. அங்கு பகல் நேரங்களில் வெப்பம் அதிகரித்தாலும், மாலை மற்றும் இரவு நேரங்களில் 14- 17 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை குறைந்து சற்றே குளிர்ச்சியான நிலை உள்ளது.

கோடை சீசனை முன்னிட்டு தயாராகும் மலர்க்காட்சிகள், குளிர்ந்த காலநிலையை மையமாக கொண்டவை என்பதால் அங்கு தற்போது கோடை சீசனுக்கு தயாரான பல லட்சம் மலர்ச்செடிகள் வாடிவிடும் அபாயம் உள்ளது. இதனால் உள்ளூர் சுற்றுலா தொழிலாளிகள் மற்றும் வியாபாரிகள் கவலை அடைந்து உள்ளனர்.

இதற்கிடையே தமிழகத்தில் ஈரோடு, கோவை உள்பட 12 இடங்களில் வெயில் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி பதிவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. இதுகுறித்து அந்த மையம் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

தெற்கு அசாம் முதல் தென் தமிழகம் வரை ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிஷா, சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் உள்கர்நாடகா வழியாக காற்றழுத்த தாழ்வுபாதை நிலவுகிறது. இதன்காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்ட கடலோர பகுதிகள் மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் வருகிற 20-ந்தேதி வரை லோன மழை பெய்யக்கூடும். இருப்பினும் உள் தமிழக மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வருகிற 18-ந்தேதி வரை உயரக்கூடும்.

தமிழகத்தில் நேற்று அதிகபட்சமாக கரூர் பரமத்திவேலூரில் 105.44 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவானது. மேலும் வேலூர்-104.36, தருமபுரி-103.1, ஈரோடு, சேலம், மதுரை விமான நிலையம்- தலா 102.2, கோவை-101.84, நாமக்கல்-101.3, திருப்பதூர்.100.4, மதுரை நகர், பாளையங்கோட்டை, திருச்சி- தலா 100 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை பதிவானதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே ஊட்டியின் வெப்பநிலை உயர்வுக்கு மரங்கள் அதிகளவில் வெட்டப்படுவது, கட்டுப்பாடின்றி அதிகரிக்கும் கட்டிடங்கள், வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஆகியவை காரணமாக உள்ளன. மேலும் கடந்த 2 ஆண்டுகளாக கோடைமழையின் தாக்கம் குறைந்து காணப்படுகிறது.

எல்நினோ போன்ற இயற்கை காலநிலை நிகழ்வுகளும் ஊட்டியின் வெப்பநிலை அதிகரிப்புக்கு முக்கிய காரணியாக உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாவிட்டால், அங்கு நிலவும் குளுகுளு காலநிலை மேலும் பாதிக்கப்பட்டு, சுற்றுலா துறைக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும்.

எனவே மரங்களை பாதுகாப்பது, கட்டிட வளர்ச்சியை கட்டுப்படுத்துவது மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை பேணுவது ஆகியவை அவசியம் என்று வானியல் நிபுணர்கள் கூறி உள்ளனர்.

## அரசியல் கார்னர்

# தொகுதி மறுசீரமைப்பு மத்திய அரசின் பாரபட்சமான நடவடிக்கை: விஜய் கண்டனம்

**சென்னை, ஏப்.16:** தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

மத்திய அரசு, மக்களவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை தற்போதுள்ள 543-இலிருந்து 850 ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட 'அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026' மூலம், மக்களவையின் அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை முன்மொழிந்துள்ளது. இந்த மசோதா, நாளை தொடங்க உள்ள நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடரில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா, நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட இருப்பதைத் தமிழக வெற்றிக் கழகம் வரவேற்கிறது. மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவைத் தவிர்த்து, 'அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026 நிறைவேறினால், தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்திற்கும், வட மாநிலங்களின் பிரதிநிதித்துவத்திற்கும் இடையே உள்ள விகிதாசார வேறுபாடு, வெகுவாக அதிகரிக்கும்.

அப்படி நிகழ்ந்தால், மொழி, கலாசாரம் மற்றும் மாநில உரிமைகள் சார்ந்த சட்டங்கள் இயற்றுதல் மற்றும் மத்திய அரசின் கொள்கைகள் வகுத்தல் உள்ளிட்டவற்றில் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைந்து, வட மாநிலங்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும். இதனால் தென் மாநில மக்களின் கோரிக்கைகள், குறிப்பாக மத்திய அரசின் அறிவிப்புகளை முழுமையாகக் கடைப்பிடித்த தமிழ்நாட்டு மக்களின் குரல், நாடாளுமன்றத்தில் ஒலிக்காமல் போகும். இது மத்திய அரசின் பாரபட்சமான நடவடிக்கை ஆகும்.

மத்திய அரசின் அறிவிப்பை, ஆண்டாண்டுக் காலமாகக் கடைப்பிடித்த ஒரு மாநிலத்திற்கு "தண்டனை"யையும், அதைப் பின்பற்றாத மாநிலங்களுக்கு "வெகுமதி"யும் தருவது போல் இந்த மசோதா நிறைவேற்றம் அமைகிறது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், நிதிப் பகிர்விலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை - விகிதாசாரம் மாறுவது, மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீட்டிலும் எதிரொலிக்கும்.

ஏற்கெனவே தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் நிதிப்பகிர்வில் இழப்பைச் சந்தித்து வருவதாக மாநில அரசு, மத்திய அரசு மீது குற்றம் சாட்டி வருகிறது. பட்ஜெட் தாக்கலின் போதும் தமிழ்நாட்டிற்குப் போதுமான நிதியையும் திட்டங்களையும் மத்திய அரசு தருவதில்லை. அப்படி இருக்கையில், தொகுதி மறுவரையறை செய்யப்பட்ட பிறகு, மக்கள் தொகை அடிப்படையிலான திட்டங்களுக்கான நிதி மேலும் குறையவே வாய்ப்புள்ளது.

இப்படிப் பல்வேறு வகைகளில் தென் மாநிலங்களுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டிற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய அரசியலமைப்பு (131ஆவது திருத்தம்) மசோதா, 2026 நிறைவேற்றும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்றும், தற்போது உள்ள பழைய நடைமுறையே தொடர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# "23ம் புலிகேசி போல் ஸ்டாலின் ஆட்சி நடத்துகிறார்" - அண்ணாமலை

**உடுமலை, ஏப்.16:** திருப்பூர் மாவட்டம், உடுமலையில் அதிமுக வேட்பாளர் கே.ராதாகிருஷ்ணனை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை பேசியதாவது: தமிழகத்தில் 2021-ல் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் திமுக ஆட்சிக்கு வர வேண்டும் என விரும்பி மக்கள் வாக்களிக்கவில்லை.

அந்த தேர்தலில் மொத்தம் 4.5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் தான் திமுக வெற்றி பெற்றது. தற்போது தமிழகம் முழுவதும் மக்கள் மத்தியில் திமுக ஆட்சிக்கு எதிரான அலை வீசுகிறது. எனவே, வரலாறு காணாத தோல்வியை திமுக தழுவும்.

திமுக அளித்த வாக்குறுதிகளில் 15 சதவீதம் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது. வடிவேலு நடித்த 23-ம் புலிகேசி திரைப்படத்தில் நடப்பதை போலவே, தமிழகத்தில் திமுக ஆட்சி நடக்கிறது. மாநிலத்தில் என்ன நடக்கிறது என்பது குறித்து முதல்வர் ஸ்டாலினுக்கு தெரியவில்லை.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை கையாளும் தன்மையை முதல்வர் ஸ்டாலின் இழந்து விட்டார். இந்த ஒரு காரணத்துக்காகவே ஆட்சி மாற்றம் வேண்டும். காவல்துறைக்கு சுதந்திரம் அளித்து, தமிழகத்தை மீட்டெடுக்க வேண்டும்.

அதிமுக பொதுச்செயலாளர் பழனிச்சாமி முதல்வராக பொறுப்பேற்றால் மட்டுமே இப்பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு காணமுடியும். இவ்வாறு அவர் பேசினார்.

# தேர்தலுக்குப் பிறகு அதிமுக தேய்ந்து, பாஜக வலிமை பெறும்: திருமாவளவன் விமர்சனம்

திருவள்ளூர்: கும்மிடிப்பூண்டி சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜனை ஆதரித்து, பெரியபாளையத்தில் விசிக தலைவர் திருமாவளவன் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது, அவர் பேசியதாவது: பாஜக, இஸ்லாமியர்களையும், கிறிஸ்தவர்களையும் எதிர்த்து வெறுப்பு அரசியலை விதைக்கும் கட்சி. அதை அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தோளில் தூக்கி சுமக்கிறார்.

பாஜகவை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் எதிர்ப்பதால், திமுகவுடன் விசிக தொடர்ந்து பயணிக்கிறது. கொள்கை அடிப்படையில்தான் இந்த கூட்டணி. திமுக கூட்டணியிலிருந்து விசிக வெளியே போனால், திமுக கூட்டணி பலவீனம் அடையும்.

அதனால், அதிமுக, பாஜக வலுவடையும். தமிழகத்தில் ஒரு காலத்தில் பாஜக ஒன்றுமே இல்லை என்ற நிலை இருந்தது. அதிமுகவால் இப்போது 11 சதவீதம் வாக்குள்ள கட்சியாக பாஜக மாறியுள்ளது.

புதுச்சேரியில் அதிமுக 10-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிட்டது கடந்த கால வரலாறு. ஆனால், இப்போது பாஜக 10 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதிமுக இரு இடங்களில் மட்டுமே போட்டியிடுகிறது. புதுச்சேரியில் அதிமுக தேய்ந்து, பாஜக வளர்ந்துள்ளது.

தமிழகத்தில் தேர்தலுக்குப் பிறகு அதிமுக தேய்ந்து பாஜக வலிமை பெறப்போகிறது. எதனாலும் அதிமுக, பாஜக வலிமை பெற்றுவிடக் கூடாது என்ற காரணத்துக்காக, திமுக கூட்டணியில் விசிக நீடிக்கிறது.

மு.க.ஸ்டாலின் ஆட்சி தொடர்ந்தால், தமிழகம், தமிழர் பண்பாடு பாதுகாப்பாக இருக்கும்; திருவள்ளுவர், பெரியார் பாதுகாப்பாக இருப்பர். அதிமுக,பாஜக வலிமை பெற்றால் பெரியார் அரசியலை வீழ்த்துவார்கள். பெரியார் அரசியல் வீழ்த்தப்பட்டால் அம்பேத்கர் அரசியலை வீழ்த்தியதாக பொருள்.

இந்த அடிப்படையில்தான் திருமாவளவன் திமுக கூட்டணியில் தொடருகிறான். பெரம்பூரிலேயே விஜய் வெற்றி பெறுவாரா என அவருக்கே சந்தேகம் உள்ளதால், திருச்சி கிழக்கில் போட்டியிடுகிறார்.

விஜய்க்கு எவ்வளவு வாக்கு கிடைக்கும் என்பது நிரூபிக்கப்படாதது. பின்னர் எப்படி அவர் வெற்றி பெறுவார், ஆட்சியில் பங்கு கொடுப்பார். அது பெரிய மோசடி. இவ்வாறு அவர் பேசினார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM